Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121)

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி-07 | 21-06-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை 123

# சிங்களப் பேரினவாதத்தினை எதிர்த்து

# வடமராட்சியில் கண்டனப்பேரணி!

## தேசியத் தலைவருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

(வடமராட்சி)

**வடமராட்சியில் நேற்று சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடத்தப்பட்டு தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இவ்வார்ப்பாட்டப்பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதுடன் பல்வேறு சுலோகங்களையும் அரசிற்கும் இராணுவத்திற்கும் எதிராக ஒலித்தவண்ணம் சென்றனர்.**

காலை 9.30 மணியளவில் திக்கம் சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் சுமார் நாலரைக் கிலோமீற்றர் தூரம் வரை சென்று சுப்பர்மடம் சந்தியையடைந்தது.

அங்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் க.சூரிய குமார் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் இடம் பெற்றது. அங்கு தமிழீழத்தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கு முகவரியிட்ட மகஜர் தமிழீழ கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச மேலாளர் மோகனிடம் கையளிக்கப்பட்டது.

மற்றும் இம்மகஜரின் பிரதிகள் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபிஅனான் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இவ்வார்ப் பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கடற்கரை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## சு.ப.தமிழ்ச்செல்வன்-ஹெல்கேசன் நாளை கிளிநொச்சியில் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அவர்களுக்கும் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நாளை நடைபெறவுள்ளது.

கொழும்பிற்கு வருகை தந்துள்ள வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் நாளை காலை விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்ததும் 9.30 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச்செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பு நடைபெறுமெனத் தெரியவந்துள்ளது. (கு)

## தமிழினம் எதற்காக ஆயுதமேந்தியதோ அந்த இலக்கு நோக்கி நாம் நகர வேண்டும்!

### -வடமராட்சி மக்கள் தேசியத்தலைவரிடம் கோரிக்கை

(வடமராட்சி)

தமிழினம் எதற்காக ஆயுதம் ஏந்திப்போராடியதோ அந்த இலக்கை நோக்கியே நாம் நகரவேண்டும். சாதாரண பொதுக்கட்டமைப்பை வழங்கவே பேரினவாத அரசு தாண்டவமாடுகின்றதென்றால் எமது உரிமைகளை நாம் எப்போது பெறுவது? எமது இனம் எப்போது சுதந்திரம் அடைவது? எமது தாயகம் எப்போது மலர்வது? இதுவரை காலமும் பொறுத்தது போதும் பொங்கி எழவேண்டும் எம் தமிழ்த்தேசியத் தலைவா, மக்கள் உன்பின்னால், அணிதிரண்டு நிற்கின்ற இவ்வேளையில், தென்னிலங்கை அரசியல் குழம்பியுள்ள இத்தருணத்தில் எமது இறுதிச் சுதந்திரப்போருக்கு ஆணையிடுங்கள் உங்களின் பணிப்பிற்காக உறுதியோடும், உணர்வோடும், சுதந்திர வேட்கையோடும் காத்திருக்கின்றோம்.

இவ்வாறு நேற்று வடமராட்சியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை திருத்த முடியாது; ரவூப் ஹக்கீமிடம் ஹெல்கேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பில் திருத்தங்கள் எதனையும் மேற்கொள்ள முடியாது என நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார். நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ள ஹெல்கேசன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமை சந்தித்துப் பேசியுள்ளார்.இதன்போது பொதுக்கட்டமைப்பில் திருத்தங்கள் மெற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முஸ்லிம்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் ஹக்கீம் கோரிக்கை விடுத்தபோதே விதார் ஹெல்கேசன் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டுள்ள விடயங்களின் அடிப்படையில் பொதுக்கட்டமைப்பு விரைவில் கைச்சாத்திடப் படவுள்ளதாகவும், இந்த நிலையில் அதில் மாற்றங்களை ஏற்படுத்த முனைவது பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்பதால் அதில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது எனவும் விதார் ஹெல்கேசன் குறிப்பிட்டுள்ளார். (32)

## சந்திரிகா-விதார் ஹெல்கேசன்; இன்று முக்கிய சந்திப்பு!

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இன்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இலங்கை வந்தடைந்தார். லண்டனிலிருந்து UL-504 விமானத்தில் மாலை மூன்றுமணிக்கு வந்தடைந்த விதார் ஹெல்கேசன், மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் மூன்று அதிகாரிகளை நோர்வே தூதரக அதிகாரிகளும் சிறிலங்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளும் வரவேற்றனர். (32)

## அக்கரைப்பற்றில் ஈ.பி.டி.பி உறுப்பினர் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுக் கத்தியால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் இன்று காலை கருங்கொடித் தீவு வயல்வெளிப் பிரதேசத்தில் சிறிலங்கா பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ரவி என்றழைக்கப்படும் அழகையா ரவிச்சந்திரன் (வயது-38) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் கடந்த சில மாதங்களாகத் தங்கியிருந்த இவர் உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக சில தினங்களுக்கு முன்பு மொனராகலைக்கு வந்திருந்தார் என்றும், அக்கரைப்பற்றிலுள்ள ஆழிப்பேரலை இடைத்தரிப்பு முகாமொன்றில் தங்கியிருக்கும் தனது மனைவி, பிள்ளைகளைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

(வவுனியா)

புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் நேற்று மதியம் வவுனியா தாலிக்குளம் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தர்மலிங்கம் அசோகன் (வயது26) என்ற முன்னாள் புளொட் உறுப்பினரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.இவருக்கு ஐந்து பிள்ளைகளும் இரண்டு மனைவிமாரும் உள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து மேற்குத் திசையில் 13 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தாலிக்குளம் வீடமைப்புத் திட்டத்தில் மதியம் 12.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆட்டோ சாரதியாக இருந்த இவரை வாடகைக்கு ஆட்டோவினை அமர்த்திச்சென்ற இருவர்ஒன்பது மி.மீ கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்திருப்பதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

ஆட்டோவில் சடலமாகக் கிடந்த இவரைப் பொலிசார் சென்று பார்வையிட்டபோது ஆட்டோ

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## SPOKEN ENGLISH

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணத்துடன் பயிற்சி ஆரம்பம:04.07.2005 மாலை 5.மணி இடம்: அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக உதயநகர் கிழக்கு. ஆசிரியர் க.யோகன் (BBA&NDE) (6288)

## தவறிவிட்டது

ஜெயபுரத்திற்கும், கிளிநொச்சி துயிலுமில்லத்திற்கும் இடையில் அல்பம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது முழங்காவில் P.MDO வில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்

(6286)

## தவறிவிட்டது

முத்துச்சாமி பிரசன்னா என்பவரது அடையாள அட்டையும், நிரந்தர பயண அனுமதி அட்டையும் திருநகர் பழைய சந்தை வீதிக்கும், சேரன் பணிமனைக்கும் இடையில் தொலைந்துவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சேரன் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

(6287)

## மணமகள் தேவை

இந்து குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 1973 இல் பிறந்த விசாக நட்சத்திரம் 02ஆம் பாதம் உள்ள விவாகரத்துப்பெற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.முகவரி:- க.திருநாவுக்கரசு (சோதிடர்)துர்க்கா வீதி.04ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு. (சி.12255)

## தவறிவிட்டது

க.நாகதீபன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை (832431281V) கிளிநொச்சிக்கும் 2ஆம் கட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம பணிமனையில் ஒப்படைக் குமாறு வேண்டப்படுகின்றீர்கள். சன்மானம் வழங்கப்படும்.

(6289)

## சான்றிதழ் வழங்கல்

எதிர்வரும் 26-06-2005 அன்று மாலை மூன்று மணிக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. எனவே 26-06-2005 இற்கு முன்னர் தங்கள் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.NITM கணனிப் பயிற்சி நிலையம் புதுக்குடியிருப்பு (6173)

# அருள் மிகு யோகபுரம் சிவன் தேவஸ்தானம்

**மல்லாவி**

## சனிப் பெயர்ச்சி தோஷ நிவாரண ஹோமசாந்திப் பூசை

*அன்புடையீர்!*

*எதிர்வரும் 23-06-2005 வியாழக்கிழமை சனீஸ்வரன் மிதுன ராசியிலிருந்து கடகராசியில் பிரவேசிப்பதால் ஏற்படும் பலாபலன்களை அனுசரித்து நாட்டிற்கும், மக்களுக்கும் நல்லருள் கடாட்சம் வேண்டி அன்றையதினம் மல்லாவி சிவன் ஆலயத்தில் காலை 9.00 மணிதொடக்கம் நவக்கிரக ஹோமசாந்திப் பூசை அபிஷேகங்கள் நடைபெற திருவருள் கூடியுள்ளதால் சகல மக்களும் இப்பூசை வழிபாட்டில் கலந்துகொண்டு தங்களுக்கு உண்டான செவ்வாய் தோஷம், நாகதோஷம்,மற்றும் பாவதோஷம் யாவும் நீங்கும்படியும் நவக்கிரக நாயகர்களின் நல்லருள் பெற்றுய்யும் வண்ணம் அழைக்கின்றோம்.*

*மேலும் விபரங்களை ஆலய கருமபீடத்தில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும். முற்கூட்டி தமது பெயர்கள் நட்சத்திரங்களைப் பதிவுசெய்து கொள்ளவும். மேலும் ராகு, கேது,சனீஸ்வரன், வியாழன், இவைகளினால் தோஷமடையும் முக்கியமான ராசிகள் மேடம்,மீனம்,மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, தனுசு, மகரம் இந்த ராசிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் தவறாது தோஷநிவர்த்தி செய்து கொள்ளலாம் என்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.*

இவ்வண்ணம்
பரிபாலனசபை,
சிவன் ஆலயம்,
மல்லாவி.

(6002)

# நிகொட்-முல்லைத்தீவு

## அமைய எழுதுநர் பதவிக்கான வெற்றிடம்

மேற்படி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் சுயவிபரத்துடன் (Bio Data) “அரச அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு” என்ற விலாசத்திற்கு 2005.07.05 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘நிகொட்-அமைய எழுதுனர் பதவி’’ எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தகைமைகள்**

1. முல்லைத்தீவு மாவட்ட நிரந்தர வாசியாக இருத்தல் வேண்டும்.
2. 18 வயதுக்கு மேற்பட்டவராக 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
3. க.பொ.த (சா/த) பரீட்சையில் 2 முறைக்கு மேற்படாத அம்ர்வுகளில் கணிதம். தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
4. கணனிப் பயிற்சிநெறியில் போதிய அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

கச்சேரி,
முல்லைத்தீவு.

திருமதி.இமெல்டா சுகுமார்
அரச அதிபர், முல்லைத்தீவு.

(சி.12226)

# பகிரங்க ஏல விற்பனை

பின்வரும் வாகன உதிரிப்பாகங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காலம்:- 24-06-2005ஆம் திகதி காலை 10.30 மணி
இடம்:- பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வாடியடி, பூநகரி.

1. லேலன்ட் பாரவூர்தி பாவிக்கப்பட்ட கௌசிங் செற் -01
2. லேலன்ட் பாரவூர்தி பாவிக்கப்பட்ட பின் வில்லுத்தகட்டுசெற்-02
3. இருசில்லு உழவியந்திர அச்சு செற்-01 (ரயர்,ரீயூப் உட்பட)
4. லேலன்ட் பாரவூர்தி பாவித்த றிம்-02

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
**கா. கார்த்திகேசு,**
தலைவர்,
பூநகரி பல நோ. கூ. சங்கம்,
வாடியடி.

(சி-12225)

# இரு அலுவலகங்கள் திறப்புவிழா

(அலுவலக செய்தியாளர்)

வாடியடி பூநகரியில் கமநல சேவை நிலையம், கால்நடை வைத்தியர் அலுவலக திறப்புவிழா எதிர்வரும் 23 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை பத்து மணிக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு மேற்படி நிலையத்தினையும், அலுவலகத்தினையும் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்

(சோ)

# ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

முல்லை மாவட்ட சகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அம்பலவன் பொக்கணையில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

காலை பத்து மணியளவில் இந்நிகழ்வு இடம்பெறும் என முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஜெயகுலராஜா தெரிவித்தார். (20)

# ஒகஸ்டில் சந்திரிகா சீனா பயணம்

பீஜிங் பெண்கள் மாநாட்டில் தலைமை விருந்தினராக பங்கேற்பதற்காக எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா சீனாவுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இப்பயணத்தின்போது சிறிலங்கா-சீனா இடையேயான முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாக சிறிலங்கா சுற்றுலாத் துறை அமைச்சர் அநுரா பண்டார நாயக்க கூறினார்.

# மலியன் சாண்டோ நடராசா உடல் பயிற்சிக் கழகத்தினால் மாபெரும் வடமாகாண ரீதியாக நடாத்தப்படும்.


## விளையாட்டுப் போட்டி

குத்துச்சாண்டை,மல்யுத்தம், ஆணழகன் (உடல்கட்டழகன்), கயிறு இழுத்தல் (ஆண்/பெண்), கை மடித்தல், கம்பியிழுத்தல் ஆகிய விளையாட்டுக்கள் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5,6,7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன பங்கு பெறும் வீரர்கள் எதிர்வரும் 15-07.2005 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் கிடைக்கும் இடம்:-
குபேரேன் தொலைத் தொடர்பகம்,
பிரதான வீதி,
பருத்தித்துறை.
T.P.021.2263077
021.2263950

(6290)

# நினைவழியா நினைவுகளில்



**பெர்னாண்டோ அகஸ்ரின்**
அன்னை மடியில்:- 1941.05.31
ஆண்டவன் அடியில்:-1986.03.23



**அகஸ்ரின் திரேசம்மா**
அன்னை மடியில்:- 1941.09.17
ஆண்டவன் அடியில்:-1996.04.05



**லெப்.இலக்கியன் (அகஸ்ரின் வசந்தரூபன்)**
அன்னை மடியில்:- 1977.10.19
ஆண்டவன் அடியில்:-2004.05.02



**ஓவியா (அகஸ்ரின் ஜஸமின் சுதர்ஜினி)**
அன்னை மடியில்:- 1980.12.17
ஆண்டவன் அடியில்:-2000.06.21

நல்லோர் மனங்களில் முத்தானீர்.
நம் தமிழ் மண்ணிற்கு வித்தானீர்.
நால்வரையும் நாமிழந்து.
நான்கு திசை நிற்கின்றோம்.
நல்ல உங்கள் ஆத்மாக்கள்.
நாளும் சாந்தி பெற வேண்டுகின்றோம்

அ.கிறிஸ்ரிரூபன்
213, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்

(5941)

# ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படையினர் தற்போதைக்கு வாபஸ்பெறமாட்டார்கள்

(வோஷிங்டன்)

**ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படைகள் தற்போதைக்கு வாபஸ்பெறும் எண்ணமில்லை. இது அமெரிக்காவுக்கு சோதனையான காலம். தீவிரவாதிகளுக்கு எதிரான நமது போராட்டம் நீடிக்கும். தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் வரைஅமெரிக்கப்படைகள் ஈராக்கில் நீடிக்கும் எனஅமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.**

ஈராக்கில் தேர்தல் நடந்து முடிந்து விட்டதால் அங்கிருந்து அமெரிக்கப்படைகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று பல்வேறு நாடுகள் அமெரிக்காவை வற்புறுத்தி வருகின்றன.அமெரிக்கப் பாராளுமன்றத்திலும் சனநாயக்கட்சி பிரதிநிதிகள் தீர்மானம் கொண்டு வந்தனர்.

ஆனால் இந்தக் கோரிக்கையை அதிபர் ஜோர்ஜ்புஷ் நிராகரித்துவிட்டார். அமெரிக்க வானொலியில் ஜோர்ஜ் புஷ் தெரிவிக்கையில்,

ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படைகள் இப்போதைக்கு வாபஸ் பெறும் எண்ணமில்லை. இது அமெரிக்காவுக்கு சோதனையான காலம். தீவிரவாதிகளுக்கு எதிரான நமது போராட்டம் நீடிக்கும். தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் வரை அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நீடிக்கும். இது அமெரிக்காவின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. அத்துடன் ஈராக் அரசிற்கு பாதுகாப்பு அளிப்பதும் அமெரிக்காவின் கடமை என ஜோர்ஜ்புஷ் கூறினார்.






நசாப் பிரதேசத்திற்கு அண்மையாகவுள்ள கபா பகுதியில் உணவு, மருத்துவ விநியோகத்திற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சாவடியில் வைத்து ஒரு ஈராக்கியப் பெண்மணியைச் சோதனையிடும் அமெரிக்க இராணுவப் பெண்மணி.



இந்தோனேஷியாவின் ஆசேப்பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. ஏற்கனவே சுனாமியால் பாதிக்கப்பட்டு சீரழிந்த அந்தப் பகுதியில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது. வெள்ளம் சூழ்ந்த ஒருசாலை வழியாக இங்கிலாந்து நிவாரணக் குழுவைச் சேர்ந்த வாகனங்கள் தண்ணீரில் மிதந்து செல்லும் காட்சி.

## ஆப்கானிஸ்தானில் வெள்ளப்பெருக்கு 48 பேர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்

ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டவெள்ளப்பெருக்கில் 48 பேர் உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

இதன் காரணமாக இப்பிரதேசத்திலுள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளதோடு விவசாய நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

பதாத் சம்யான்யத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் 25 பேர் உயிரிழந்துள்ளதாக பிராந்திய ஆளுநர் கூறியுள்ளார்.

290 ஹெக்டேயர் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளதாகவும் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் பிராந்திய ஆளுநர் கூறியுள்ளார். இவ் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆப்கானிஸ்தான் அரசு தொடர்ந்து உதவி வருகின்றபோதிலும். அது மக்களுக்குப் போதுமானதாக இல்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் கிராமிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைச்சு உணவு வகைகளையும் அவசர உதவிகளையும் ஆப்கானிஸ்தானின் வடபகுதி நகரமான பைசா பாத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த மார்ச்மாதம் குளிர்காலத்தின்பின் ஏற்பட்ட கடும்மழை மற்றும் உருகுபனி என்பவற்றின் காரணமாக 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தலிபான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பொலிஸ்அதிகாரி சுட்டுக்கொலை

(காந்தகார்)

ஆப்கானிஸ்தானில் உயரதிகாரி உட்பட 31 பொலிசாரைச் சிறைப்பிடித்து வைத்திருந்த தலிபான் தீவிரவாதிகள், அவர்களைக் கொன்றுவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அரச அலுவலகங்களில் கடந்த ஒரு வரமாகத் தலிபான் தீவிரவாதிகள் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றனர். சமீபத்தில் நடத்திய தாக்குதலின்போது 31 பொலிசாரை சிறைபிடித்துச் சென்றனர்.

இந்நிலையில், பிடித்துவைத்துள்ளஅனைவரையும் கொன்றுவிட்டதாகத் தலிபான் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். இது குறித்து தலிபான் தீவிரவாத அமைப்பின் செய்தித்தொடர்பாளர் அப்துல்லத்தீப் ஹக்கீமி கூறியதாவது,

தலிபான் மதத்தலைவர்களின் உத்தரவுப்படி, இன்று காலை 8.30 மணிக்கு பொலிஸ் உயரதிகாரி நனாஇகான் சுட்டுக் கொல்லப்பட்டார். பொலிஸ் அதிகாரியின் குற்றச் செயல் கள் பெருகிவிட்டதால் அவரைச் சுட்டுக்கொன்றோம். ஷாய்கான் கிராமத்தில் புதைக்கப்பட்டுள்ள அவரது உடலை அரசாங்கம் எடுத்துச்செல்லலாம். மீதமுள்ளவர்களையும் கொல்வோம். இவ்வாறு ஹக்கீமி கூறினார்.

இதற்கிடையே பொலிசார் 31 பேரைத் தலிபான் தீவிரவாதிகள் பிடித்துச் சென்றதை காந்தகார் மாகாண உயர் பொலிஸ் அதிகாரி கடந்த சனியன்று உறுதிசெய்தார். இது குறித்து காந்தகார் மாகாண பொலிஸ் உயரதிகாரி சலீம்கான் கூறுகையில்," கடத்தப்பட்டவர்களின் நிலை குறித்து இதுவரை எந்தத்த கவலும் கிடைக்கவில்லை," என்றார்.



ஈராக்கின் பாக்தாத் நகரில் ஷியா முஸ்லிம் மசூதி அருகேரோந்து சென்ற அமெரிக்க இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் கார்க்குண்டுத்தாக்குதல் நடத்தினார்கள். இதில் அந்தக் கார் சின்னாபின்னமாகிக் கிடக்கும் காட்சி. இந்தத்தாக்குதலில்மூன்றுஅமெரிக்கப்படையினர் பலியானார்கள்.

## இராணுவச் சிப்பாய் தாக்குதல் சக சிப்பாய்கள் 8 பேர் பலி!

(சியோல்)

தென்கொரியாவின் இராணுவச்சிப்பாய் ஒருவர் சகவீரர் களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டத்தில் எட்டுப் பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர். மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்

இந்தச்சம்பவம் பற்றி இராணுவ செய்தித்தொடர்பாளர் கூறியதாவது,

பணியில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் திடீரென தன்னுடைய சக இராணுவச் சிப்பாய்கள் மற்றம் உயரதிகாரிகள் மீது கையெறி குண்டுகளை வீசினார். பின்னர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார். இதில், அவருடன் பணிபுரிந்த சக வீரர்கள் எட்டுப் பேர் அதே இடத்தில் பலியாயினர். மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தாக்குதல் நடத்தியதற்கான காரணம் உடனடியாத் தெரியவில்லை.

இவ்வாறு இராணுவச் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

## காஸா குடியேற்றங்களை அப்புறப்படுத்தும் விடயத்தில் ஒத்துழைக்க பலஸ்தீனம் விருப்பம்

காஸா குடியேற்றங்களை அப்புறப்படுத்தும் விடயத்தில் இஸ்ரேலுடன் ஒத்துழைக்கப் போவதாக பலஸ்தீன சனாதிபதி மகமுத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு ஒத்துழைப்பதன் மூலம் அவர்களால் எஞ்சிவிடப்பட்டதைக் கொண்டு அதிகபட்ச பலனை அடையவுள்ளதாகவும் பலஸ்தீன சனாதிபதி கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதித்தடைகளை நீக்குவதுடன் குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து வாபஸ் பெறுமாறு ஏரியல் ஷரோனைக் கோருவதன் மூலம் அப்பகுதிக்கான பொறுப்புக்களை ஏற்க முடியுமென்றும் அவர்கள் வாபஸ் பெற்றால் முழுமையான பொறுப்புக்களை ஏற்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

வோஷிங்டனில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைப் பின்பற்றச் செய்யும் நோக்கில் கொண்டலிசா ரைசின் விஜயம் அமைந்ததாகவும் அமெரிக்கர்களுடன் பல விடயங்களில், உடன்பட்டதாகவும் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள தாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை இஸ்ரேல் அரசாங்கம் பத்தாயிரம் பேரை சிறையில் அடைத்திருப்பது எவருக்குமே பிரயோசனமற்றது என சுட்டிக்காட்டிய அவர் சமாதானத்தில் இஸ்ரேலுக்கு உண்மையான அக்கறை இருப்பின் அதனை வெளிப்படுத்தும் வகையில் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



ஜப்பான் பிரதமர் ஜூனிச்சிரோ கொய்சூமி தென் கொரியாவுக்கு வருவதைக் கண்டித்து தென்கொரியாவின் சியோல் நகரில் போராட்டம் நடந்தது. அங்குள்ள ஜப்பான்தூதர் அலுவலகம் முன் போராட்டக்காரர்கள் ஜப்பான் கொடி மற்றும் கொய்சூமி படத்தை தீவைத்து கொளுத்திய காட்சி.

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று முன்தினமிரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜப்பானின் கிழக்குக் கடற்கரையில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1புள்ளியாகப் பதிவானது. டோக்கியோவுக்கு6.5 கிலோமீற்றர் கிழக்கே கடலுக்கடியில் 49 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் கடற்கரை ஓரப்பகுதிகளில் உள்ள கட்டடங்கள் அதிர்ந்தன. யன்னல் கண்ணாடிகள் நொருங்கின. சில இடங்களில் வீடுகள் சேதமடைந்தன. இந்த நில நடுக்கத்தால் சுனாமிப் பேரலைகள் உருவாகும் என்ற பரபரப்பு ஏற்பட்டது.



அல்-சக்குர் முகாமிலிந்து பக்தாத்தின் சுற்றுப் புறத்தில் ரோந்து நடவடிக்கைக்காக ஈராக் விசேட படையினர் வாகனம் ஒன்றில்வெளியேறிச் செல்கின்றனர்.

# வறிய கிராமங்களில் 100 வீடுகள் நிர்மாணிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குள பிரதேச செயலர் பிரிவில் உலகவங்கி நிதியுதவியுடன் நீர்ப்திட்டத்தின் கீழ். தெரிவான வறிய கிராமங்களில் நூறு வீடுகள் நீர்மாணிக்கப்படவுள்ளன.

கரும்புள்ளியான், சிராட்டிகுளம், பாலைப்பாணி, ராமேயன்குளம் ஆகிய கிராமப்பகுதிகளிலுள்ள நிரந்தர வறிய குடும்பங்களுக்கு இவ்வீட்டுத்திட்டம் அமையவுள்ளது.

இதன் மூலம் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் நற்பயனை அடையவுள்ளனர் இக்கிராமங்களிற்கான புதிய வீட்டுத்திட்டத்தின் நிர்மாண வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட்டவுள்ளன. (24)



கிளிநொச்சி உருத்திரபுரம் டி-8 கிராமத்தின் 4ஆம் குறுக்கு வீதி போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் சேதமடைந்துள்ளதனையும் எவராலும் கவனிப்பாரற்ற நிலையில் பலவருடங்களாக எவ்வித புனரமைப்பு மேற்கொள்ளப்படாமலும் உ்ள்ளதனை படத்தில் காணலாம். (படம் -சோதி)

# புதிய கட்டடம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்பு விழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலர் க. சுலோஜினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன், கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் ந. பகீரதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (சோ)

# கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு



கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்று முன் தினம் நடைபெற்றது.

நிகழ்வில் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பொது மக்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில்தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவைப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் மக்கள் கடைப்பிடிக்கப் வேண்டிய அத்தியாவசிய சுகாதார நடைமுறைகள் சம்பந்தமாக தெளிவாக விளக்கிக் கூறினார்.

# வட்டக்கச்சிப் பிரதேசத்திற்கு மின் விநியோக திட்டமொன்றை செயற்படுத்த வேண்டுகோள்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி கிழக்கில் மக்கள் பெருமளவில் செறிந்து வாழும் வட்டக்கச்சி பிரதேசத்தில் சீரானதும், நிரந்தரமானதுமான மின்விநியோகத் திட்டமொன்றை செயற்படுத்துமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

கிளி/கிழக்கு பிரதேசத்தில் அதிகமான மக்கள் செறிந்து வாழும் வட்டக்கச்சி பகுதி தற்போதைய புனரமைப்பு பணிகளினால் எந்தவிதமான அபிவிருத்தியையும் பெறவில்லை. குறிப்பாக வட்டக்கச்சி பிரதேசத்திற்கு இதுவரை மின்விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. தொழில் முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கும் பொதுமக்களின் அன்றாட வாழ்வியல் தேவைகளிற்கும் மின்சாரம் என்பது தேவையாகவுள்ளமை தெரிந்ததே. இருந்தபோதும் வட்டக்கச்சி பிரதேசத்திற்கு மின் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டப்படுகின்றனர்.

வட்டக்கச்சி பிரதேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளிற்கு மின் விநியோகத்தை மேற்கொண்டு வந்த நறுமை மின் வழங்கல் சேவையினது செயற்பாடும் கடந்த இரு மாதகாலமாக நிறுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் வட்டக்கச்சியின் அனைத்து பகுதி மக்களும் பயன் பெறும் வகையில் சீரானதும், நிரந்தரமானதுமான மின்விநியோகத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இதனை அரச அதிகாரிகளோ, மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்தவர்களோ கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கை மேற் கொள்வது அவசியமானதாகும். (15)

# அரசியல் விழிப்புணர்வை உருவாக்க முல்லையில் தீப்பந்த ஊர்வலம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஒட்டறுத்தகுளம், வடகாடு மக்களினால் இன்றைய அரசியல் சூழ்நிலையை முன்னிட்டு தீப்பந்த ஊர்வலமொன்று நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஒட்டறுத்தகுளம் கிராம அபிவிருத்திச் சங்கவளாக முன்றலில் மாலை 6.45 மணியளவில் ஆரம்பமான இத்தீப்பந்த் ஊர்வலத்தில் இளைஞர்கள், பெண்கள், முதியவர் கள் எனப்பலரும் தீப்பந்தத்தை ஏந்தி யவாறு மல்லாவி மாங்குளம் வீதி வழியாக சிங்கள இராணுவமே எமது வாழ்விடங்களை விட்டு வெளியேறு, நாங்கள் எங்கள் சொந்த இடம் செல்ல வழிவிடு, பொதுக்கட்டமைப்பு எனக் கூறி எம்மை ஏமாற்றாதே நாங் களும் போராட்டத்தயார் என பல கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை நகர்ந்த இவ்ஊர்வலம் வடகாடு கதிரவன் குடியிருப்பு வசீகரன் விளையாட்டு மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு அம்பாள்புரம் அரசியல் துறைப்பொறுப்பாளர் ம.செந்தூரன் தலைமையில் கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் கருத்துரைவழங்கினார். நிகழ்வில் பொதுமக்கள் , பொறுப்பாளர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதற்கான ஒழுங்கினை மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர், பாண்டியன் குள துணுக்காய்பிரதேச பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர்கள் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். (24)

# கட்டாக்காலி நாய்களை அழிக்க வேண்டுகோள்

(பூநகரி)

பூநகரியின் பல பாகங்களிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக முழங்காவில், நாச்சிக்குடா, வலைப்பாடு, ஜெயபுரம், பரமனகிராய், நல்லூர், கறுக்காய்த்தீவு,ஞானிமடம் ஆகிய கிராமங்களில் அதிகமாகக்காணப்படுவதால் மக்கள் பகலில் நடமாடுவது கூட சிரமமாக இருக்கின்றது.

அத்துடன் கூட்டமாகச் சேர்ந்து திரிவதால் கோழி,ஆடு போன்றவைகளைக் கூடவும் பிடிக்கின்றன. அதன் காரணமாக கறுக்காய்த்தீவில் இம்மாதம் எட்டு ஆடுகள் இறந்துள்ளன. செம்பன் குன்றிலும் இரண்டு ஆடுகள் இறந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (34)

# தேசிய அடையாள அட்டை நடைமுறையில் மாற்றம்

(மன்னார்)

தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதில் தற்சமயம் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த 15ஆம் திகதி முதல் இந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது முன்பு கறுப்பு, வெள்ளை நிறங்களால் ஆன புகைப்படத்தை கொண்ட தேசிய அடையாள அட்டைகள் தற்போது வர்ணப்புகைப்படங்களாக மாற்றப்பட்டுள்ளதுடன், அதற்கான பழைய மஞ்சள் நிற விண்ணப்பப்படிவங்கள் இரத்துச் செய்யப்பட்டு புதிய படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் . (18)

# நிதி கிடைக்காமையால் ஒப்பந்தக்காரர் அவலம்

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பாடசாலைகளில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகை வேய்தலுக்கான நிதி ஒதுக்கீடு ஒருவருடமாகியும் கிடைக்காத நிலையில் ஒப்பந்தக்காரர்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

கடந்தாண்டு நடுப்பகுதியில் தற்காலிக கொட்டகைகள் ஒப்பந்தக்காரர் மூலம் வேயப்பட்டும் இதுவரை அதற்கான நிதி வழங்கப்பாடாத நிலையில் சில பாடசாலைகளின் அதிபர்கள் இடமாற்றத்திலும் ஓய்வு பெற்றும் சென்றுள்ளதால் நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் அவலப்பட்டு வருகின்றனர்.

வலயக் கல்வித்தினைக்களத்தால் வழங்கப்படவேண்டிய மேற்படி நிதியினை உரிய காலங்களில் வழங்கினாலேயே பாடசாலையின் ஏனைய வேலைகளிலும் நம்பிக்கை கொள்ளமுடியுமென ஒப்பந்தக்காரர்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)

# வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்றது.

இராமநாதபுரம் விவசாயப் பெருமக்களும், ஜொனி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய நிகழ்வில் மங்கல விளக்கினை சவாரிச்சங்கச் செயலாளர் சிவசுப்பிரமணியமும், தேசியக்கொடியினை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடரும் ஏற்றி வைத்தனர்.

உழவு இயந்திரப் பெட்டி கொழுவுதல், அடுத்து இருவர் சேர்ந்து வண்டி இழுத்தல், மாட்டுவண்டிச் சவாரி போட்டிகள் நடைபெற்றன. இதில் மாட்டுவண்டிச்சாரிப் போட்டி அ, ஆ, இ, ஈ, எனும் பிரிவுகளாக நடைபெற்றது.



இதில், உழவு இயந்திரப் பெட்டி கொழுவுதல் போட்டியில்

முதலாம் இடம் ம.கலைச்செல்வன் வட்டக்கச்சி, இரண்டாம் இடம் ம.சுகிர்தன் இராமநாதபுரம், மூன்றாம் இடம் த.கரன் ஆறாம் யூனிற் இராமநாதபுரம்,

இருவர் சேர்ந்து வண்டி இழுத்தல் போட்டியில்

முதலாம் இடம் நகுலேந்திரன், சதீஸ் பன்னங்கண்டி, இரண்டாம் இடம் ஞா. வசந்தன், ச.தீபன் வட்டக்கச்சி, மூன்றாம் இடம் செநகுலேஸ்வரன் இறமணன் புளியம் பொக்கணை,

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில்

அ பிரிவில்:-

முதலாம் இடம் த.குகன் முரசுமோட்டை, இரண்டாம் இடம் மு.செந்தில்குமார் பிரமந்தனாறு, மூன்றாம் இடம் த.அருட்சன் விசுவமடு,

ஆ பிரிவில்:-

முதலாம் இடம் க.சிறிகரன் பூநகரி, இரண்டாம் இடம் ப.தனுஜா வட்டக்கச்சி, மூன்றாம் இடம் ச.ஜோஜ் ஜெயசீலன் ஊற்றுப்புலம்,

இ பிரிவில்:-

முதலாம் இடம் ஆ. ரவி பன்னங்கண்டி, இரண்டாம் இடம் ம.தேவன் கலவெட்டித்திடல், மூன்றாம் இடம் சி.கபில் வட்டக்கச்சி,


ஈ பிரிவில்:-


முதலாம் இடம் அ.அருள்வதனி ஆறாம் யூனிற் இராமநாதபுரம், இரண்டாம் இடம் இ. திருச்செல்வம் திருமுறிகண்டி, மூன்றாம் இடம் க.விஜிதரன் முரசுமோட்டை ஆகிய போட்டியாளர்களே வெற்றியை தமதாக்கி பரிசில்களை தட்டிக் கொண்டனர். (12)

# சிங்களப் பேரினவாதிகளைக் கண்டித்து வடமராட்சியில் பேரணி









(படப்பிடிப்பு: காங்கேயன், தயாபரன்)

## நேற்று எழுச்சியுடன் நடைபெற்ற

# யாழ்.மாவட்ட தே. எ.பேரவையின் மாநாடு

(யாழ்ப்பாணம்)


**யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் எழுச்சி மாநாடு நேற்று யாழ். நல்லூர் இளம்கலைஞர் மாநாட்டு மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.**

காலை பத்து மணியளவில் தொடங்கிய மாநாட்டில் பொதுச்சுடரினை தனேஸ்வரக் குருக்கள், தென்இந்தியத் திருச்சபை ராஜ்குமார் அடிகளார், தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் பிரபா, பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மாவீரர் திலகனின் தயார் இராசலிங்கம் இராணியம்மா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றினார். மாவீரர்களின் படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலையினை நல்லூர் பிரதேச அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூமகளும், யாழ். பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் செழியனும், வலி கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சாம்பசிவமும் ஏற்றினர். தலைமையுரையினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ. சிறிலும் சிறப்புரையினை, த. தே. எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் த.உமைநேசனும், கருத்துரைகளை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஈழவேந்தன் மற்றும் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் ஆற்றினர். இந்த மாநாட்டுக்கு பெருந்தொகையான பேராளர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



(28, 41)



(அலுவலக செய்தியாளர்)

யாழ். முஸ்லிம்களின் வாழ்வியல் நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி ஆராயுமுகமாக நேற்று முன்தினம் யாழ். ஒஸ்மேனியாக் கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெற்றது.

உலாமா சபைத்தலைவர் சுபியான்மௌலவி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், முஸ்லிம் வர்த்தகர் தாகீர், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், சிவாஜிலிங்கம், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியாக முஸ்லிம் மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகள் தீர்த்து வைப்பதற்கான தீர்மானங்கள் பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது. (சு,41)

## தேசிய எழுச்சிப் பேரவையின் சமூக பொருளாதார மேம்பாட்டு சேவை

யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினால் திருநெல்வேலி பால்ப் பண்ணைப் பகுதி மக்களுக்கான சமூக பொருளாதார மேம்பாடு விசேட சேவை நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக நடைபெற்றது.

இதில், வீடற்றோருக்கான வீடமைப்புக் கடன் உதவிகள் பெற்றுக கொடுத்தல், மலசல கூடம், கிணறு அமைப்பதற்கான உதவி, சிறு தொழில் ஊக்குவிப்பு, விலங்கு வேளாண்மைச் செயற்பாடு போன்ற வற்றிற்கான கடன் வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற நடவடிக்கையுடன் கால்நடை மருத்துவ அதிகாரியின் கால் நடை மருத்துவ சேவையும் நடைபெற்று கால்நடைகளுக்கான மருந்துகளும் வழங்கப்பட்டதோடு வறிய மாணவர்களுக்கு சீருடையும் வழங்கப்பட்டன. (சு, 41)

## மறவன்புலோ மேற்கில்

# தற்காலிக கூடாரங்களை விற்று வாழ்க்கையை நடாத்தும் மக்கள்

(தென்மராட்சி)

மறவன்புலோ மேற்கில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமக்கு [illegible] தற்காலிக கூடாரங்களை வறுமையினால் விற்றுவருகின்றனர்.

மறவன் புலோ மேற்கில் இராணுவ உயர்பாதுகாப்பு வலய [illegible] மீளக்குடியமர்ந்த மக்கள் தமக்கு வழங்கப்பட்ட ரூ. 25 ஆயிரம் [illegible] தற்காலிக வீடுகட்டும் உபகரணங்களை வறுமையின் காரணமாக விற்று வருவதாகத் தெரியவருகின்றது. வேலையின்றி [illegible] மூழ்கியுள்ள மக்கள் தமது அன்றாட சீவியத்திற்கு [illegible] விலை களில் விற்று வருவதாகத் தெரிய வருகிறது.

(28)


# இடைத் தேர்தலில் மோசடி அவ நம்பிக்கையின் வெளிப்பாடு!

தமிழகத்தில் இப்போது கொந்தளிக்கும் அலையாகவுள்ள பிரச்சினை எதுவென்றால்... போலி வாக்காளர் சேர்க்கப்பட்டமையும், அதனால் எதிர்க்கட்சி புயலாக மாறி இருப்பதும் ஆளும் கட்சி மிரண்டு போயிருப்பதுமேயன்றி வேறில்லை எனலாம்.

இப்பொழுது தமிழகத்தில் எங்கும் வியாபித்திருக்கும் போலி வாக்காளர் சிக்கலானது தலைமைத்தேர்தல் ஆணையகத்திற்கு பெரும் உபாதைகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை தமிழகத் தேர்தல் ஆணையகமும் திக்கு முக்காடாமல் இல்லை. ஏனெனில் எதிர்க்கட்சிகளின் குடைச்சல் ஒரு புறம் தலைமைத்தேர்தல் ஆணையகத்தின் விசாரணை மறுபுறம் என்று தமிழகத் தேர்தல் ஆணையாளர் நரேஷ் குப்தா அங்கும் இங்குமாகப் பந்தாடப்படுகின்றார்.

தலைமைத் தேர்தல் ஆணையகம் அதிரடி நடவடிக்கை ஒன்றையும் எடுத்திருக்கின்றது. மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களது அதிகாரத்தைப் பறிமுதல் செய்திருக்கின்றது.



நரேஷ் குப்தா

இதேவேளை, போலி வாக்காளர்களைப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டதா...? என்று மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தலைமைத்தேர்தல் ஆணையகம் வினவி இருந்தது.

ஆனால் இம் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தேர்தல் ஆணையகத்தின் வினாவை அசட்டை செய்திருந்தனர். அலட்சியப்படுத்தியே விட்டனர் என்று தான் கூற வேண்டும். இதனையடுத்தே தேர்தல் ஆணையகம் அவர்கள் மீது தமது அதிகாரப் பிரயோகத்தை நிலை நாட்டியிருக்கின்றது என்பதையும் காணமுடிகின்றது.

இதனால் ஏனைய தமிழக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிரண்டு போயுள்ளனர். தமக்கும் இதேகதியே என்று கலக்கமடைந்துள்ளனர். இவர்கள் மட்டுமல்ல தமிழக மந்திரிகளும் ஏக களேபரத்தில் தான் இருக்கின்றனர். ஏனெனில் இவர்களின் உத்தரவின் பெயரில் தான் புதிய வாக்காளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பதிவு செய்ததாகப் புதிய பூகம்பமும் எழுந்திருக்கின்றது.

எனவே தான் தமிழக மாவட்ட ஆட்சியாளர்கள், மந்திரிகள் இப்போது பெரும் அவலத்தில் மாட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் கொண்டாட்டத்தில் இறங்கியிருக்கின்றன.

ஏற்கனவே நடைபெற்ற கும்டிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெற்றமை யாவரும் அறிந்த தொன்று. ஆனால் அன்றே தி.மு.க கூட்டணி போலி வாக்காளர்கள் மூலமே அ.தி.மு.க வெற்றி [illegible]தாகக் குற்றச்சாட்டை சுமத்தியது. அ[illegible]டுமன்றி தமிழகத் தேர்தல் ஆணையகம், தலை[illegible] தேர்தல் ஆணையகம் இரண்டிற்கும் [illegible] குற்றச்சாட்டை [illegible]களாக [illegible]பித்தன.

அன்று தொடங்கியது தமிழகத்தில் வாக்காளர் பதிவு ஆராயும் புலனாய்வு இன்று வரை முடிந்த பாடில்லை. ஆனால் ஆராய்விற்கு உட்படுத்தியவைகளில் பல உண்மைகள் வெளி வந்திருக்கின்றன.

தமிழகத்தில் 234 தொகுதிகளில் புதிய வாக்காளர் பட்டியல் கும்டிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தலுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டது. ஏற்கனவே இருக்கும் தொகையுடன் புதிதாக சேர்க்கப்படும் வாக்காளர்களின் தொகை 3% - 5% மாகவே இருப்பது வழமை.

இம் முறை இந்த வழமை காணப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும், 10% மான வாக்காளர்களின் பெயர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதுவும் 25 மாவட்டங்களில் 15 இலட்சம் பேர் தமது பெயரை வாக்காளர் பட்டியலில் இணைத்திருப்பது தெரிய வந்திருக்கின்றது. அதுவும் 13 இலட்சம் பேர் ஒரே நாளில் இணைக்கப்பட்டிருப்பதும் அம்பலமாகியுள்ளது.

இத்தகைய செயலானது ஜனநாயகத்திற்கு முரணானது என்று தேர்தல் ஆணையகம் கூறியிருப்பது கவனிக்கத்தக்க தொன்று.

அது மட்டுமன்றி சேலம், ஈரோடு மாவட்டங்களில் 12 தொடக்கம் 15 வயது வரையானவர்க ளது பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்டிருப்பது வெளிச்சமாகியிருக்கின்றது.

இதனால் நாளாந்தம் தமிழகத்தில் புதிய வாக்காளர் பதிவில் புதிய புதிய பூதங்கள் வெளிவந்த வண்ணமிருப்பதையும் காணலாம். இதனால் வாக்காளர் பதிவே கேலிக்கூத்தாக மாறிவிட்டதாக விசனமும் இல்லாமலில்லை.



கருணாந



ராமதாஸ்

தற்போது தமிழகத்தில் மையம் கொண்டிருக்கும் சிக்கல்கள் ஐந்தாகவுள்ளது. ஐந்து ஐம்பதாகுமா.. எனும் சந்தேகமும் வலுக்கத் தொடங்கியிருக்கின்றமை மறுப்பதற்கில்லை அந்த வகையில்....

* வாக்காளர் பட்டியலில் குளறுபடி நிகழ்ந்திருக்கின்றது.

* குளறுபடிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலை வர்களும் உடந்தையாக இருந்துள்ளனர்.

* மாவட்ட ஆட்சியாளர்களை தமிழக மந்திரிகளே மிரட்டிப் பதிவுகளை மேற்கொள்ள வைத்துள்ளனர்.

* எல்லாவற்றிற்கும் தமிழக அரசே பச்சைக்கொடி காட்டியிருக்கின்றது.

* 17 இலட்சம் போலி வாக்காளர்களின் பெயர்கள் பதியப்பட்டுள்ளமை தேர்தல் அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றையடுத்து போலி வாக்காளர்களைப் பதிவு செய்த அரசியல் கட்சி மீதும், மாவட்ட நிர்வாகி மீதும் உடனடியாக வழக்குப் பதிவு செய்யுமாறு மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கு தலைமைத் தேர்தல் ஆணையகம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

[illegible]துமட்டுன்றி தலைமைத் தேர்தல் ஆணையகமும், தமிழகத் தேர்தல் ஆணையகமும் இணைந்து

* வாக்காளர் பட்டியல் முறைகேடு தொடர்பாக என்ன நடவடிக்கை...?

* போலி வாக்குகளைப் பதிவு செய்வதற்கு உடந்தையானவர்கள் மீது என்ன நடவடிக்கை...?

*அ.தி.மு.க மீது என்ன நடவடிக்கை..?

எடுப்பது என்று மும்முரமாக சிந்தித்தும் ஆராய்ந்து வருகின்றன. இதனால் நரேஷ் குப்தா தமிழகத்திற்கும் டில்லிக்குமாக பறந்தபடி இருக்கிறார் என்பது தெளிவு.

ஏற்கனவே கும்டிபூண்டி, காஞ்சிபுரம் தேர்தல் கண்காணிப்பில் சுப்பர் ஹீரோ என்று வர்ணிக்கப்பட்டவர் நரேஷ் குப்தா தான். ஏனெனில் இடைத்தேர்தல் நடைபெற்ற மாவட்டங்களில் பம்பரமாக சுழன்று நிலைமைகளைக் கண்காணித்தவர் என்று பெயரெடுத்தவர்.

அது மட்டுமன்றி வாக்குப் பதிவில் மோசடியோ, வன்முறையோ ஏற்படாமைக்கு நரேஷ் குப்தா தான் காரணம் என்று ஆளும் கட்சிக்கோ எதிர்க் கட்சிக்கோ சார்பானவர் அல்லர் என்றும் புகழப்பட்டவர்.

ஆனால் இன்றோ நரேஷ்குப் தாவுக்கே ஆப்பு வைக்கப்பட்டிருக்கும் அவலம் தெரிய வந்திருக்கின்றது.

அதாவது நரேஷ் குப்தா மிகவும் கடுமையாக தேர்தலின் போது இரவு பகலாக போலி வாக்கு பதிவு நடைபெறாதவாறு மேற் பார்வையில் ஈடுபட்ட போதும், போலி வாக்குப் பதிவு நடைபெற்றிருப்பதும் மோசடி நடாத்தப்பட்டிருப்பதும் தெரிய வந்திருக்கின்றது.

அதுமட்டுமன்றி தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் வாக்குப் பதிவுகள் மீள் பரிசீலணை செய்யப்பட இருக்கின்றன. இதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும், ஒரு விண்ணப்பப் படிவமும் 28 கேள்விகளும் வினவப்பட்டிருக்கின்றன.

இதில் அந்தந்த மாவட்டத்தில் 1977 இன் தேர்தல் முடிவுகள், வாக்காளர் எண்ணிக்கை,கட்சிகள் பெற்ற வாக்குகள் என்பன உள்ளடங்கலாக வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய தேவை மாவட்டத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.




இதன் மூலம் உண்மைத் தகவல்களை வெளிக் கொண்டு வருவதே தமது பிரதான பணியென்று தேர்தல் ஆணையகம் சபதமிட்டுள்ளது எனலாம்.

இதனால் போலி வாக்காளர் பதிவால் தமிழகம் அல்லோல கல்லோலப்படுகின்றது என்பது மட்டுமே வெளிப்படையுண்மையாகும்

அதேநேரம், எதிர்க்கட்சிகள் இதனை பெரும்பிரச்சினையாக்காது விடமாட்டாது போல் தான் நிலமைகள் உள்ளன. தி.மு.க தலைமையில் அனைத்து கூட்டணிக் கட்சிகளும் அடிக்கடி கூடுகின்றன. போலி வாக்காளர் பதிவு பற்றி மட்டும்தான் விவாதிக்கின்றன. "எங்கே சுண்டினால் எங்கே வலிக்கும்" எனும் முகமாக காய்களை நகர்த்தி வருகின்றன.

இதனால் பெரிதும் துன்பத்திற்குள்ளாகி இருப்பது தமிழக ஆளும் அ.தி.மு.க அரசு தான்! ஏனெனில் கும்டிப்பூண்டி, காஞ்சிபுரம் தொகுதிகளில் வெற்றி பெற்றும் எதுவித பலனுமில்லை என்று தான் கூற வேண்டும். அதுமட்டுமன்றி இடைத்தேர்தல் வெற்றி கூட கேலிக்கு இடமமைத்துவிட்டது என்று தான் நம்பத் தோன்றுகின்றது.

அத்துடன், ஆளும் கட்சியாக இருந்து கொண்டு வாக்காளர் மோசடி செய்வது என்றால் என்ன அர்த்தம் கொள்ள முடியும். மாநிலத்தில் ஆளும் கட்சியின் செல்வாக்கு செல்லாக் காசு ஆகி விட்டது என்று தான் பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

இதனை உண்மையாக்குவது போன்று



ஜெயலலிதா

தான் தமிழக மந்திரி ஓ. பன்னீர்ச் செல்வம் வாக்காளர் மோசடி என்று அ.தி.மு.க மீது யாரும் வழக்குத் தொடர அனுமதிக்கக் கூடாது என்று சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருப்பதானது "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போன்றது தான்!

எது எப்படியென்றாலும் கூட எதிர்க் கட்சிக்கு அரைப்பதற்கு அவல் கிடைத்திருக்கின்றது. தேர்தல் ஆணையகம் தகுந்த நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும் இல்லையேல் எதிர்க்கட்சிகள் மத்தியரசு வரை இப் பிரச்சினையைக் கொண்டு செல்லவும் தயங்க மாட்டாது.

என்றாலும், தமிழகத்தில் 12 ஆயிரம் சாலைப் பணியாளர்களும், இரண்டு இலட்சம் அரச ஊழியர்களும் தமிழக அரசினால் பதவி நீக்கப்பட்ட வெறுப்பில் இருக்கின்றனர். இவற்றை விடவும் தமிழக அரசின் செல்வாக்கு சரிந்து வருவதாகக் கூறப்படும் வேளையில் கும்டிப் பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தல் வெற்றியானது ஆளும் கட்சியை தலை நிமிர வைத்தது.

**அ.கலைவாணி**

இன்றோ வாக்காளர் மோசடி யால் அந்த வெற்றி அதாள பாதாளத்தை நோக்கி நகரவுள்ளதாகவே கொள்ள முடியும்.

மேலும் ஆளும் அ.தி.மு.க பல வினாக்களுக்கு விடை பகர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

* கும்டிப் பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தல் வெற்றி போலி வாக்காளர்களினாலா..?

* ஏன் போலி வாக்காளர்கள் பட்டியல் தயாரிப்பு..? தமிழகத்தில் ஆளும் கட்சியின் செல்வாக்கு சரிவா..?

* போலி வாக்காளர் பட்டியலைத் தயாரித்தவர் யார்...?

போன்ற வினாக்களுக்கு விடையளிக்கத் தவறும் பட்சத்தில் அடுத்த சட்டமன்றத் தேர்தல் எட்டாக் கனியாகவே ஆகிவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை எனலாம்.



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

அப்பாடி.. அந்தப் பெண்ணா? அப்பா போன்றே சண்டை போடுகிறது! அமெரிக்காவில் மாத்திரமல்ல.. பல நாடுகளில் தற்போதைய பேச்சு இதுதான். லைலா அலிதான் அந்த அசத்தல் நட்சத்திரம்.

முன்னாள் சம்பியன் முகமது அலியின் மகளான இவர் குத்துச் சண்டையில் தற்போது தனிமுத்திரை ரபதித்து வருகிறார்.

கடந்தவாரம் வோஷிங்டனில் நடந்த "சூப்பர் மிடில் வெயிட்;" குத்துச் சண்டைப் போட்டியில் இவர் எரிக்டன் ஹில்லை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இந்தப் பட்டம் பெறும் முதல்



## புலிக்கும் பிறந்தது பூனையாகுமா?

பெண்மணி என்ற பெருமை இவரை வந்து சேர்ந்தது.


இதில் என்ன விடயம் என்றால் எதிர்த்து மோதிய டன்ஹில் சாதாரணமானவர் இல்லை பிரேசிலில் புகழ்பெற்ற "கிக்பொக்சிங்"; கற்றுத் தேர்ந்தவர் மூன்றே சுற்றுகளில் அவரை வீழ்த்தி அசத்திவிட்டார் லைலா. அது மட்டுமல்ல பெண்கள் தரவரிசையில் இவருக்குதான் முதலிடம். 21 போட்டிகளில் மோதிஒன்றில்கூட தோற்றதில்லை.

குழந்தைபோல மனநலம் குன்றியிருக்கும் தந்தை முகமது அலியிடம் இது உங்கள் மகளின் வெற்றி என்று புரிய வைக்க வேண்டிய கஷ்டத்தில் இருக்கிறார் லைலா. தன்னைப போலவே இவர் செயற்படுவதாக மகமது அலியும் பெருமைப்படுகிறார். முன்னணி நிறுவனங்கள் இவரை தங்கள் விளம்பரத்துக்கு ஒப்பந்தம் செய்ய கடும் போட்டி போடுகின்றனர்.

**சர்ஜிபப்கா** என்பவர் உலகின் தலை சிறந்த கோலூன்றிப் பாயும் முன்னாள் வீரராவார். அவர் அவ்வாறு பாயும் போது பட்டம் ஒன்று பறப்பதைப் போன்று இருக்கும். அதே போன்றே தற்போது அந்தப் போட்டியில் கொடிகட்டிப் பறக்கின்றார் ஒரு பெண். அவர் ஜெலினா இசின்பரேவா என்ற வீராங்கனை ஆவார். அவரே தற்போது உலகின் சாதனை பாராட்டியுள்ளார்.

இவர் உடற்பயிற்சியை ஆரம்பித்தது ஐந்தாவது வயதிலாகும். 16 வயது வரை பயிற்சி எடுத்து அதன் பின் அதனைக் கைவிட மனம் வரவில்லை என்று தெரிவித்த அவர் அது வாழ்க்கை யோடு ஒன்றித்து விட்டதாகக் கூறுகி றார். அதிலிருந்து போட்டிகளில் பங் கேற்று வெற்றி பெறுவது என அவர் உறுதி





## வெற்றியே இலக்கு...

வீராங்கனையாகத் திகழ்கின்றார். அவர் கடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றதுடன், 2004 ஆம் ஆண்டின் சிறந்த வீராங்கனைப் பட்டத்தையும் வென்றுள்ளார்.

இந்த கோலூன்றிப் பாய்தலில் அவர் அவரது உடற் பயிற்சியாளரான அலெக்சாண்டர் இவனோவிக் லிசரரி என்பவரை பெரிதும் பூண்டுள்ளார். பெண்களுக்கு இவ் வாறான போட்டிகள் சமூகத்தில் நற் பெயரை ஏற்படுத்தாதா போதும் தனது திறமையை வெளிப் படுத்தும் நோக்கில் தான் இருந்தாக தெரிவிக்கிறார்.

இவர் முதலில் தனது தாய் நாடான ரஷ்யாவில் உள்நாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்துள்ளார். அவரது மேலும் ஒரு பயிற்சியாளரான பொட்ரோவ் கூறும் போது: ஜெலினா பளு தூக்குதலில் சற்று பின்னடைவு காணப்படுவதாகவும், இளம் யுவதி என்ற வகையில் அது சரியாகி விடும் என்று கூறுகிறார். அத்துடன் ஜெலினா நல்ல உயரமானவராக இருப்பதால் பயிற்சிகளின் போது காயமேற்படுவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஜெலினா உலகில் புகழ்பெற்ற வீராங் கனையான போதும் அவரது தந்தை சாதாரண தொழிலாளியாவார் . எனினும் தனது பிள்ளை யின் திறமைக்கு அவர்கள் எந்தவிதமாகவும், தடைவிதிக்கவில்லை. ஜெலினா 2003ஆம் ஆண்டு உயரம் பாய்தலில் 4.82 மீற்றர் பாயந்து உலக சாதனை படைத்தார். அப்போது அவ ருக்கு 50 ஆயிரம் டொலர் பரிசாக வழங் கப்பட்டது.

தற்போது 23 வயதான இவர் என்றாவது ஒரு நாள் உயரம் பாய்தலில் ஐந்து மீற்றரைக் கடக்க வேண்டும் எனத்தெரிவிக்கிறார்.



**இதை** நம்ப முடிகிறதா? இல்லை நம்பித்தான் ஆக வேண்டும். தோல்வியின் வேதனை அறியாது வெற்றிமேல் வெற்றிபெற்று திளைத்து உயர்ந்து நின்ற அணி ஒன்று படுதோல்வி ஒன்றை சந்தித்ததுடன் தொடர்ச்சியான தோல்விக்கும் முகம் கொடுத்துள்ளது.

இங்கிலாந்து மண்ணில் காலடி எடுத்து வைத்த நேரமோ என்னமோ அவ்வணிக்கு தற்போது இறங்குமுகம் ஏற்பட்டுள்ளது. இதில்தோல்வி மேல் தோல்வி கண்ட பங்களாதேஷ் அணியுடனான தோல்வி அவ்அணியை ஆடிப்போக வைத்துள்ளது.

வங்களாதேச அணி ஒரு நாட்டின் முதல் தர அணியின் தரத்தில் கூட இல்லை. இதன்டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நிலையில் உலகத்தரத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் முதல் இடத்தில் இருக்கும் அவுஸ்ரேலிய அணியை வீழ்த்தியதால் அதனுடைய பெயரும், புகழும் வானளாவ உயர்ந்து விட்டது.(பங்களாதேஷ் தரவரிசையில் கடைசி இடத்தில் உள்ளது)

போட்டி என்று எடுத்துக் கொண்டால் வெற்றிகள் தோல்விகள் நிரந்தரமானவை அல்லத்தான் ஆனாலும் பலமான அணி ஒன்றுக்கு எதிர்பார்க்காத அணி ஒன்றுடனான தோல்வி நேர்த்தியான திட்டமிடல் மூலம் வெற்றிக்கனியை பறிக்கும் அவுஸ்திரேலிய அணித் தலைவர்களில் பொண்டிங் சிறந்தவராக விளங்குகின்ற போதும் பங்களாதேசுக்கு எதிராக அவரின் வியூக அமைப்பு தவிடு பொடியாக்கப்பட்டமை அவரை பொறுத்து ஏமாற்றமான ஒன்றே.


பங்களதேஷ் அணி தனது வலிமையையும், திறமையையும் வலுவான அணிக்கு ஒன்றுக்கு எதிராக காட்டியுள்ளமை அவ்அணி ஒட்டுமொத்த உலகத்தையே தனது நாட்டின்பக்கம் ஈர்த்துவிட்டது.

இந்த நிலையில் இப்படி ஒரு எழுச்சி பங்களதேசஷ்க்கு எப்படி ஏற்பட்டது என்பதை கூறாமல் இருக்கமுடியாது. இதில் வீரர்களின் தன்னம்பிக்கை உறுதி என்பன ஒரு பக்கம் இருக்க பயிற்சியாளரின் பணி உயர்ந்து நிற்கின்றது.

அவர்யாருமல்ல கிரிக்கெட் உலகில் மிகவும் புகழ் பெற்ற ஒருவர்தான். 1996ஆம் ஆண்டு சிறிலங்கா அணியை உலகக் கிண்ணத் தை கைப்பற்றும் அளவுக்கு எழுச்சியடையச் செய்த இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட அவுஸ் திரேலியரான வட்மோர்.



## ஆனைக்கும் அடி சறுக்கும்



அவுஸ க்கு இது அமைந்து விட்டதுதான்.

வழமையாக எதிரணி ஒன்று வெற்றி பெற்று வடும் என்ற நிலை உணரப்படும்போது எந்த அணியாலும் ஜீரணிக்க முடியாததாகவே இருக்கும்.

உலகில் முன்னணி அணிகளை எல்லாம் துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் மதிநுட்பமான வியூக அமைப்பால் துவம்சம் செய்து அதிரடி யான வெற்றிகளைக் குவித்த அவுஸ்ரேலியா கத்துக்குட்டி பங்களாதேசுக்கு எதிராக ஒவ்வொரு பந்துக்கும் வியூகம் அமைக்க வேண்டிய நிலைக்கு அணித் தலைவர் பொண்டிங்கை தள்ளியது தான் பரிதாபம். ஆச்சரியம் என்ன வென்றால் கடந்த இரண்டு தசாப்தத்தில் பெரும் பதற்றத்துக்கு உள்ளாக்கிய போட்டியாக

இவரது பணியே வீழ்ந்து போய்கிடக்கும் அணிகளை நிமிர்த்தி விடுவதுதான். இதற்குசிறிலங்கா, பங்களதேஷ் அணிகள் உதாரணம்.

வெற்றிகுறித்து வட்மோர் தெரிவிக்கையில்; தான் நினைத்ததை செய்து முடித்துள்ள தாகவும். தொலைக்காட்சியைப் பார்த்த 140 மில்லியன் ரசிகர்களின் கைகளில் சென்ற டைந்த பாரிய வெற்றி இது வென்று பெருமிதமடைகின்றார்.

இதற்கிடையில் பங்களதேஷ் அணியின் வெற்றி உலகப்பத்திரிகைகளில் முதற்பக்கத்தை அலங கரித்துள்ளதுடன், "வங்கப்புலி அவுஸதி ரேலியாவை கடித்து குதறிவிட்டது அவுஸ் திரேலியா மரணத்தை முத்தமிட்டு விட்டது" என்றெல்லாம் தலையங்கம் தீட்டியுள்ளன. இது அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்து தனது கிரிக்கெட் வரலாற்றில் கறைபடிந்த ஒன்றாகவே பதிவாகிவிட்டது. வெற்றிகளையே ருசித்து வந்த அவுஸ் ரசிகர்களுக்கும் இது ஏமாற்றமான ஒன்றே.

அவுஸ்திரேலியாவை வென்று விட்டால் உலகத்தையே வென்று விட்டதாக பெருமிதம் அடையும் பங்களதேஷ் ரசிகர்கள் இனிவரும் காலங்களில் கிரிக்கெட்டை வளர்க்க பாடுபடுவார்கள் என்பதை உறுதியாக நம்பலாம். □

# பொதுக்கட்டமைப்புக்கு எதிரானவர்களை திரட்டி புதிய கூட்டமைப்பு உருவாக்க ஜே.வி.பி முயற்சி!

*–அரசில் இணையும் எண்ணமில்லையென்கிறார் வீரவன்ச*

எக்காரணங்கொண்டும் ஜே.வி.பி. மீண்டும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்துகொள்ளாது என்று ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார். மீண்டும் தம்மை கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் பல தரப்பினராலும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்திருக்கும் அவர், எனினும் பொதுக்கட்டமைப்பு யோசனைகள் கைவிடப்பட்டாலொழிய, தாம் மீண்டும் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்துகொள்ளப்போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். தம்மால் மீள ஒப்படைக்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் இன்னமும் காலியாகவே இருப்பதாகச் சுட்டிக்காட்டி, அரசாங்கத்திலிருக்கும் சிலர் தம்மை மீண்டும் அரசில் இணைந்துகொள்ளுமாறு கோரிவருவதாகவும் அவர் இதன்போது கூறியுள்ளார். ஜே.வி.பி. தலைவர்கள் தற்போது பொதுக்கட்டமைப்புக்கு எதிரானவர்களை அணிதிரட்டிப் புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் இதில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும்கூட இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார். அரசாங்கத்தின் பல்வேறு முடிவுகள் குறித்து தம்முடன் எதுவும் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்தும் தமக்கு எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் விமல் வீரவன்ச இதன்போது குற்றஞ்சாட்டியுள்ளார். ஜே.வி.பி.யினரை மீண்டும் அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ளச்செய்யும் முயற்சியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தீவிரமாக இருப்பதாகவும் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போகம்பறை சிறைக்கைதியிடம் கைக்குண்டு மீட்பு!

போகம்பறை சிறைச்சாலையிலுள்ள கைதியொருவரிடமிருந்து கைக்குண்டொன்றை கைப்பற்றியிருப்பதாக கண்டி பொலிசார் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் நீதிமன்றத்தில் நிறுத்திவிட்டு பின்னர் போகம்பறை சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்ட சிறைக்கைதியொருவரிடமிருந்தே இந்தக் கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைக்குண்டை கையிலெடுத்து வெடிக்கவைக்கப் போவதாக சிறைக்கைதி, சிறைச்சாலை அதிகாரியை பயமுறுத்தியுள்ளார்.

எனினும், சிறைக்கைதியை மடக்கிப்பிடித்த சிறைச்சாலை அதிகாரிகள் அவரிடமிருந்து கைக்குண்டை கைப்பற்றியுள்ளனர்.

மொகமட் நியாஸ் எனும் அந்தக் கைதி மீது 14 இற்கு மேற்பட்ட பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## ஐ.தே.க வே தீர்மானிக்கும்

ராஜித சேனாரத்தின

தற்போதைய அரசாங்கத்தின் போக்கைத் தீர்மானிப்பது ஐக்கிய தேசியக் கட்சியே என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தமக்கு வேண்டிய நேரத்தில் முடிவுக்குக்கொண்டு வரக்கூடிய அரசாங்கமே தற்போது இருப்பதாக இங்கு குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர், பெரும்பாண்மை பலம் எதிர்க்கட்சியிடமே இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் ஜே.வி.பி அரசிலிருந்து விலகிக் கொண்டது

**-ஜாதிகஹெல உறுமய கூறுகின்றது**

பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கு, அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாது போனமையால், அரசாங்கத்தைவிட்டு வெளியேறியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தின தேரர் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் பாணந்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அத்துரலியே ரத்தின தேரர் இவ்வாறு கூறியுள்ளார். ஜே.வி.பி.க்கு அதன் சுய கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லையென இங்கு குறிப்பிட்ட அத்துரலியே ரத்தின தேரர் அவர்கள் ஒருவருடமேனும் ஆட்சியில் இருந்தது அதிசயம் எனவும் குறிப்பிட்டுள்ளார். உலக வங்கியின் பிளக்கைக் கழற்றுவதாகவும், தமிழீழத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் கூறியே வாக்குகளைப் பெற்றுக்கொண்டு ஆட்சிக்கு வந்ததாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும் உலக வங்கியின் பிளக்குக்கு சிவப்பு நிறத்தைப் பூசிய ஜே.வி.பி.யினர், ஜப்பானுக்குச் சென்று நிதியுதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தினதேரர் மேலும் தெரிவித்துள்ளார்.


**விற்பனைக்கு**

நல்லின தென்னை நாற்று விற்பனைக்கு எம்மிடம் உண்டு. விலை ரூபா. 35/–மொத்தமா கவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 0777–238422

பொதுமுகாமையாளர், பூ.ப.நோ.கூ. சங்கம்.

(சி.12224)


## மூன்றாம் வருட நினைவஞ்சலி

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 03 | | 24 |
| 12 | | 06 |
| - | | - |
| 1937 | (திதி:-21.06.2005) | 2002 |



### திருமதி:ஆனந்தராஜா தெய்வநாயகி

(வட்டுக்கோட்டை)


*தெய்வமாய் எம்மையெல்லாம்–இத்*
*தரணியில் வழிநடத்திய அன்புருவே*
*நித்தமும் நினையெண்ணி*
*கலங்குகின்றோம் விழிநீரால்*

தகவல்:
மருமகன் மகிந்தன்
கிளிநொச்சி. (6284)

உங்கள் அன்பிற்காக ஏங்கும் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவு கண்ணீர் வணக்கம்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 14 | 22 |
| 08 | 05 |
| 1935 | 2005 |



### நாட்டுப்பற்றாளர் சதா.தனபாலசிங்கம்

(வட்டக்கச்சி)

*கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்து சீரிய பணியாற்றிய நாட்டுப்பற்றாளர் சதா. தனபாலசிங்கம் அவர்களுக்கு எங்கள் கண்ணீர் வணக்கத்தை செலுத்துகின்றோம். அத்துடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

செயலாண்மைக் குழு உறுப்பினர்கள்
கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம்

(5940)

## காணிபற்றிய முக்கிய அறிவித்தல்

*கீழே குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் 2005.06.30 ஆம் நாள் முதல் செயற்படுத்தப்படவுள்ளதென்பதைச் சகலரினதும் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.*

01 காணித்தேவைக்காகக் காடுகளை அழிப்பதும், பற்றைக்காடுகளை வெட்டுவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

02 காணி வழங்கப்பட்டு நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யாது, உரிமையாளரும் இங்கு இல்லாது, பயன்படுத்தப்படாதிருக்கும் காணியினை அத்துமீறிப்பிடித்து ஆட்சி செய்வதோ, உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் இல்லாது உறவினர் ஆட்சி செய்வதோ முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

03 2இல் காட்டப்பட்ட காணி தொடர்பில் எவரும் தற்போது இருப்பாரேயானால் அவர் தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமில்லாது தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

04 பொதுத்தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், நீர்ப்பாசன குளப்படுக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், கழிவு வாய்க்கால்கள், வீதிகள் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை எவராவது அத்மீறிப் பிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது. அத்துமீறிப்பிடித்து ஆட்சிசெய்து வந்தால் அக்காணிகளை உரிய தேவைக்காக மீள சுவீகரிப்புச் செய்யப்படும்.


05 4 இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் ஏதாவது காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சிசெய்து வருவாரேயானால் அவர்கள் தாம் பிடித்து வைத்துள்ள காணி தொடர்பான விபரத்துடன் தமிழீழ நிர்வாக சேவை. நடுவப்பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதம் இன்றி தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

06 இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அரச காணிகளைத் துப்புரவு செய்து வசித்து வந்த குடும்பங்கள் மீள தமது இருப்பிடங்களுக்குச் சென்றதும், அக்காணிகளை தற்போது வேறு நபரால் ஆட்சிப்படுத்தவோ அல்லது அபிவிருத்தி செய்யவோ முடியாது. அக்காணி பொதுத்தேவைக்காக எடுக்கப்படும்.

07 மேலே காட்டப்பட்ட நடவடிக்கைகளுக்கு கீழ்ப்படியாது அதனை மீறி செயற்படுபவர்கள் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம்,
தமிழீழம்.

(சி.12218)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா சிறப்பிதழ் - 21.06.2005





## நாடுவோர்க்கு நலமான வாழ்வு தரும் நாக பூஷணி தேரேறி வருகின்றாள்

யாழ்ப்பாணக் குடாநாடும் அதனை அடுத்துள்ள ஒவ்வொரு சிறு தீவும் புராதனப் பெருமை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. லைடன்தீவு, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு எனும் சப்ததீவுகளுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது நயினாதீவு. இது யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் கடற்பாதையில் தென் மேற்குத் திசையில் 20 மைல் தூரத்தில் உள்ளது. நயினாதீவுக்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் உள்ளது அனலைதீவு. நயினாதீவு ஏறக்குறைய ஏழு மைல் சுற்றளவைக் கொண்டது. மூன்று மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் உள்ளது. இது மாங்காய் வடிவமுடையது. கடுகு சிறிதெனினும் காரம்பெரிதென்ற முதுமொழிக்கிணங்க நயினாதீவு அளவாற் சிறிதெனினும் தொல்புகழாற்றலில் சிறந்த தீவாக விளங்கு கின்றது.

சரித்திர காலத்திற்கு முன்தொட்டே பல பல சிறப்புப்பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த பெரும் புகழுடையது நயினாதீவு. இத்தீவின் பல்வேறு பெயர்களை அறிந்து கொள்வது அதன் வரலாற்றை அறிந்து கொள்ளுதலில் ஒரு பாகமாகும். இத்தலத்திற்கு நாகதீவு அல்லது நாகத் தீவு, நயினார்தீவு, நாகநயினார்தீவு, மணிநாகதீவு, மணிபல்லவத்தீவு, மணித் தீவு, பிராமணத்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன.

### நாகம் அர்ச்சனை செய்தது

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டு பூக்கள் கொய்துகொண்டு புளியந்தீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும், அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல் ஒன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற வைசிகன் ஒருவன் (மாநாய்கன் என்பர் சிலர்) அந்நாகத்தின் பயத் தைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான் "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடுப்பாயானால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டுக்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும், மனைவியும் நித்திரைகொள்ளும்போது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிதுநேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த பொழுது நாகஇரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள்.

நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இது எனக் கருதி அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள்.

இத்தகு அற்புத வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கும் நயினை நாகபூஷணி யம்மையின் பார்த்தீப வருடத்திற்கான உயர் திருவிழா கடந்த 08.06.2005 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் மகோற்சவங்கள் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இன்று அன்னை தேரேறி அருள் பாலிக்கின்ற திருக்காட்சியினைக் காண இலங்கையில் மட்டுமல்லாது உலகம் பூராகவும் வாழும் மக்கள் நயினாதீவில் ஒன்று கூடுகின்ற நிகழ்ச்சியைக் காணலாம், "என்ன வரம் கேட்டாலும் உடனே தருகின்ற தேவி தன்னை நாடிவரும் பக்தர்களை அரவணைத்துக்காத்து இரட்சிப்பதற்காக திருத்தேரிலே பவனிவருகின்றாள். நயினாதீவு இந்திரலோகம் போல காட்சியளிக்கின்றது. அலை கடலிலே ஆயிரமாயிரம் படகுகள் அடியவர்களை ஏற்றிச் செல்லுகின்ற காட்சி தீவகத்தை அணிசெய்து நிற்கின்றது. எல்லாம் வல்ல நாகதேவி நாட்டிலே நிரந்தரமான தீர்வையும், அமைதியான சமாதான வாழ்வையும் தரவேண்டுமென அனைவரும் பிரார்த்திப்போமாக.

**கவிமாமணி மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன் (B.A)**





கிளிநொச்சி நகரிலும், மல்லாவி நகரிலும் உங்களுக்கு தேவையான புடைவை வகைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை**

யாழ்சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி. (சி-12130)

உங்கள் நாவிற்கினிய குளிர்பான வகைகள், ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழ நாடுங்கள்.

**கல்யாணி கிறீம்ஹவுஸ்**

இல: 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-12131)




சிறுவர்முதல் பெரியோர் வரை யாவரும் விரும்பிஅணியும் தங்கநகைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

**மைதிலி நகைமாடம்**

இல:89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே: 021-2227902 (சி-12133)

இலத்திரனியல் மற்றும் அழகுசாதன, அன்பளிப்புப்பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**டாட் என்ரபிறைஸ்**

இல: 11,12, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
இல: 02, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

தொ. பே: 021-2223098, 021-2227622 (சி-12134)

**C.B.COMPUTER ACADEMY**
கோண்டாவில்.

A/L (2006/2007) மாணவர்களே!

GIT (Pascal)

இவ்வருடம் August மாதக் கடைசியில் நடைபெறவுள்ள GIT பரீட்சைக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய "Pascal Program" ஆரம்பமாகின்றது.

| Days | Batch | Time |
|---|---|---|
| Monday Wednesday | I | 3.00p.m |
| Friday | II | 6.00p.m |
| Saturday | I | 11.00a.m |
| Sunday | II | 5.30p.m |

Start on 22-06-2005

Fees one hour:- 20/=

பதிவுக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
ஏனைய GIT பாடங்கள் இதிலிருந்து தொடர்ந்து நடைபெறும்.
ஆற்றல் தகுதி அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் மேற்கொள்ளப்படும்.
அரச அங்கீகாரம் பெற்ற தகவல் தொழில் நுட்ப சான்றிதழைப் பெற்றுக் கொள்ள GIT பரீட்சையில் அதிக கவனம் செலுத்துங்கள்.
மூன்று மாதிரி வினாத்தாள்கள் செய்து விடப்படும்.
(சி-12139)

புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப் பெற்றிட...
முகஅமைப்பிற்கேற்ப சங்குப் பற்களைப் பொருத்திட...
மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்திக்கொள்ள...

**எரிக்கனேஷ்**

பல்கட்டும் இடமும் மூக்குக் கண்ணாடி அகமும்.

இல:564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்: சுன்னாகம், கொக்குவில் சந்தி. (சி-12135)

அசல் 22கரட் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள

**மணி ஐயப்பா நகைமாடம்**

யாழ்சாலை, கிளிநொச்சி.
(ஈழநாதம் பணிமனை முன்பாக)
தொ. பே:021-2285981 (சி-12136)

பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

**குமரகுரு**

புடைவை அழகுப் பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.
தொ. பே:021-2285971 (சி-12137)




மிகக்குறைந்த கட்டணத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களுக்கு...!

**திருமுருகன் கொம் நெற்**

இல: 259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021-2227835 தொ. நகல்: 021-2227836

இல: 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021-2227560 தொ. நகல்: 021-2227310

(சி-12140)

# அமரர் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணப்போட்டி
# அரையிறுதி , இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு



போட்டியின்போது லக்கிஸ்ரார், உதயதாரகை அணிகள்

அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்து, மென்பந்து கிரிக்கெட், வலைப்பந்துப் போட்டிகளில் நேற்று நடைபெற்றன. மென்பந்து அரையிறுதிப் போட்டிகளில் தோழர்கள் அணியும் இளந்தாரகை அணியும் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்குத் தெரிவாகின.

கிருஷ்ணபாரதி தோழர்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தோழர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 14 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சுரேஷ் 15, டினேஷ் 13 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்துவீச்சில் ரவிநாத் மூன்று விக்கெட்டுக் களையும், குகராஜ் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கு நோக்கி ஆடிய கிருஷ்ணபாரதி 14 ஓவரில் 59 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்து. 15ஓட்டங்களால் தோல்வியுற்றது. பந்துவீச்சில் உதேந்திரன், டினேஷ் தலா மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

முதலாவது அரையிறுதியில் இளந்தாரகை அணி எதிர்த்தாடிய ஸ்கந்தா அணியை ஏழு விக்கெட்டுக்களால் வென்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தா முதலில் துடுப பெடுத்தாடி 15 ஓவர் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரதீசன் 18,கௌரிதா சன் 13, செல்வகுமார் 12, ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யோகீசன், நித்தேஸ் தலா இரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்

வெற்றியிலக்கு நோக்கியாடிய இளந்தாரகை 11.4 ஓவரில் மூன்று விக்கெட்டை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று வெற்றி யீட்டியது. துடுப்பாட்டத்தில் பிரபு 34ஓட்டங்களையும், யோகீசன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதேவேளை மாலை நடைபெற்ற கால்பந்து கால் இறுதிப் போட்டிகளில் லக்கிஸ்ரார், சந்திரோதயா அணிகள் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவாகின.

முதலாவது காலிறுதியில் உதயதாரகை அணியை எதிர்த்தாடிய லக்கிஸ்ரார் 1-0 என்ற கோல் கணக்கிலும்,உருத்திரபுரம் அணியை எதிர்தாடிய சந்திரோதயா அணி 1-0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவாகின.

இன்று மாலை முதலாவது அரையிறுதிப்போட்டியில் ஸ்கந்தா அணியை எதிர்த்து உழவர் ஒன்றியம் அணி மோதுகின்றது.(ச)




சந்திரோதயா அணி (படம் சசி)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு ஆழியவளையில் விளையாட்டு மைதானம்



இளையோர் செயற்பாட்டு நிறுவனமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த செயற்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான விளையாட்டுமைதானம் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் பாடசாலைவீதி ஆழியவளையில் இளையோர் விளையாட்டுக்கழக தலைவர் தலைமையில் நேற்று பி.ப.5.30மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை முகாம் தலைவர் வே. ஜெயபாலகிஸ்ணன் ஏற்றிவைக்க அதனைத் தொடர்ந்து அகவணக்க நிகழ்வு இடம்பெற்றது அடுத்து பெயர்ப் பலகையினை இளையோர் செயற்பாட்டு வடமராட்சி கிழக்கு இணைப்பாளர் இ.மதி திறந்து வைக்க, விளையாட்டு மைதானத்தினை விளையாட்டு ஆலோசகர் மனோ நாடவை வெட்டித்திறந்து வைத்தார். அதனை அடுத்து விளையாட்டு உபகரணங்களை முன்பள்ளி தலைவர் வழங்கிவைத்தார். அதனை அடுத்து நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.



# புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் வி.போட்டி
# விக்கினேஸ்வராவை வீழ்த்தியது சுப்பர்ராங்

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டகழகங்களுக்கிடையி லான உதைபந்தாட்டப்போட்டியின் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

மாலை 5.00மணியளவில் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற. இப்போட்டியில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுப்பர் ராங் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சுப்பராங் விளையாட்டுக்கழக அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இப்போட்டியின் பிரதம நடுவராக வின்சனும், பக்க நடுவர்களாக சசி தரசீலன், வேலும் மயிலும் ஆகியோர் கடமையாற்றினர். (08)

# 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 95 வயது தாத்தா புதிய சாதனை

100 மீற்றர் ஓட்டத்தில் 95 வயதுத்தாத்தா புதிய சாதனை படைத்துள்ளார்.

ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரில் நேற்று முன்தினம் நடந்த முதியோர் தடகளப்போட்டியில் 95வயது ஜப்பான் தாத்தா ஹராகுச்சி புதிய உலக சாதனை படைத்தார். அவர் 22.04 வினாடிகளில் 100 மீற்றர் ஓட்டத்தில் வெற்றிபெற்றார். இதற்கு முன்பு உலக சாதனையாக 24.01 வினாடி தான் சாதனையாக இருந்தது. இவர் 95வயது முதல் 99 வயதிற்குட் பட்டவர்கள் பிரிவில் முதியவர் ஓட்டத்தில் கலந்து கொண்டார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இவர் 90வயது முதல் 94வயதிற்குட் பட்டவர்கள் பிரிவில் கலந்து கொண்டு 100 மீற்றர் ஓட்டத்தில் ஓடினார். அப்போது போட்டித்தூரத்தை 18.08 வினாடிகளில் கடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாவூத்இப்ராகிம் குடும்பத்துடன் சம்பந்தம் ஒப்புக்கொண்டார் பாக்.வீரர் மியாண்டட்

1993ஆம் ஆண்டு மும்பை தொடர் குண்டு வெடிப் புடன் தொடர்புடையதாகத் தேடப்படும் தாவூத் இப்ராகிம் மகளுக்கும் தனது மகனுக்கும் திருமணம் நிச்சயிக் கப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார் ஜாவித் மியாண்டட்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஜாவித் மியாண்டட் இவர் பயிற்சியாளராகவும் இருந்துள் ளார். இவரது மகன் ஜுனாயத் தற்போது லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறார். இருவருக்கும் மும்பை தாதாவான தாவூத் இப்ராகிம் மகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாக சில தினங்களுக்கு முன்தகவல்கள் வெளியாயின. இதற்கான நிச்சயதார்த்தம் கடந்த சனவரியில் முடிந்ததாகக் கூறப் பட்டன.

மேலும் திருமண ஏற்பாடுகள் டுபாயில் ரகசியமாக நடந்து வருவதாகவும் முக்கிய நபர்கள் சிலர் மட்டுமே அழைக்கப்படுவார்கள் எனவும் தகவல்கள் தெரிவித்தன. இது குறித்து லாகூரில் பேட்டியளித்த மியாண்டட் திருமண விடயம் முற்றிலும் பொய்யானது எனப் பேட்டியளித்தார். இந்நிலையில் திநியூஸ் நாளிதலுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் திருமண விடயம் உண்மை என ஒப்புக்கொண்டுள்ளார்.

எனது மகனுக்கும் தாவூத் மகளுக்கும் திருமணம் நடக்கப்போவது உண்மைதான் இது ரகசியமாக நடத்தப் படாது அனைவர் முன்னிலையிலும் நடக்கும் இதற்கான திகதிகள் ஏதும் உறுதி செய்யப்படவில்லை கூடிய விரைவில் எல்லோர் முன்னிலையிலும் திருமண திகதி அறிவிக்கப்படும் எங்களைப்பொறுத்தவரையில் திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. என்பதில் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இவ்வாறு மியாண்டட் கூறியுள்ளார். தாவூத் இப்ராகிம் 1993இல் மும்பையில் நடந்ததொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் மூலம் இந்தியாவில் தேடப்பட்டு வரும் முக் கிய குற்றவாளி என்பதால் திருமணத்தில் அவர் பங்கேற்க மாட்டார் எனத்தெரிகிறது.

# உலகக்கோப்பை கைப்பந்து போட்டி இரண்டாவது சுற்றுப்போட்டிகள்

உலககோப்பை கைப்பந்து போட்டியில் தகுதி பெறுவதற்கான போட்டியில் இரண்டாவது சுற்றுப் போட்டி கஜகஸ்தானில் அலமாட்டி நகரில் நடந்தது.

இதில் கொரிய அணியும் தைபேயி அணியும் மோதின. கொரிய அணி 25-18,25-23, 23-25, 25-22 என்ற செட்டில் வெற்றி பெற்றது.இன்னொரு பிரிவில் கஜகஸ்தான் அணி ஐக்கிய அரபு எமிரேட் அணியை 25-20, 25-15, 25-17 என்ற செட்டில் தோற்கடித்து கொரிய அணியும் ஐக்கிய அரபு எமிரேட் அணியும் மோதிய மற்றொருபோட்டியில் கொரிய 25-13, 25-16,25-18 என்ற செட்டில் வெற்றி பெற்றது. மற்றொரு பிரிவில் கஜகஸ்தான், தைபேயியை யும் அடுத்த போட்டியில் தைபேயி ஐக்கிய அரபு எமிரேட்டையும் தோற் கடித்தது.


இன்னொரு போட்டியில் கஜகஸ்தான் அணி கொரியாவை 25-21,25-20, 17-25, 33-31 என்ற செட்டில் வென்றது.







கார்டிப் நகரில் கடந்த சனியன்று நாட்வெஸ்ட் கிரிக்கெட் முத்தரப்பு தொடரில் உலக சம்பியன் அவுஸ்திரேலியாவை, வங்கதேசம் அணியினர் ஐந்து விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாதனை படைத்தனர். இந்த செய்தியை வங்கதேசத்தலைநகர் பாக்காவில் உள்ள அனைத்து செய்தித்தாள்களும் முதல்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தன. இதனை ஆர்வமுடன் படிக்கும் வங்கதேச கிரிக்கெட் ஆர்வலர்கள் .

# பார்முலா-1 கார் போட்டி ஷூமாக்கர் முதல் இடம்பெற்றார்



கார் போட்டிகளில் பிரபலமானது பார்முலா-1 கார்போட்டி. இந்த ஆண்டுக் கான 'பார்முலா-1' கார்போட்டி 19 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் ஒன்பதாவது சுற்றுப் போட்டி நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் உள்ள இந் தியான போலிஸ் நகரில் நடைபெற்றது. இதில் ஸ்பெயின் வீரர்அலோசா, பின்லாந்து வீரர் கெமிரெய்ன்கோன், ஜேர்மன் வீரர் ஷூமாக்கர் போன்ற முன்னணி வீரர்கள் உட்பட 20 பேர் கலந்து கொண்டனர். அமெரிக்க பார்முலா-1 கார் பந்தயத்தில் கலந்துகொண்ட அணிகளில் ஏழு அணிகள் விலகியன. இதனால் பெர்ராரி,ஜோர்டான் உட்பட ஆறு பேர் மட்டுமே பங்கேற்றன. பார்முலா-1 கார் பந்தயத்தில் ஏழு முறை சம்பியன் பட்டம்வென்ற பெர்ராரி அணியைச்சேர்ந்த மைக்கல் ஷூமாக்கர் இந்த போட்டியில் பிரகாசித்தார்.

ஷூமாக்கர்அமெரிக்க பார்முலா-1 போட்டியில் முதலாவது இடம்பிடித்தார். அதே பெர்ராரி அணியைச்சேர்ந்த பிரேசில் வீரர் ரூபன் பாரிச்செல்லா இராண்டாவது இடத்தைப் பிடித்தார்.



### சிந்தனைக்கு

எமது வீரசுதந்திரவரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## இன்றும் தடை என்ன?

பொதுக்கட்டமைப்பைத் தீவிரமாக எதிர்த்து வந்த ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட்டது. இந்நிலையில் தற்பொழுது உள்ள கேள்வியானது பொதுக்கட்டமைப்பு எப்பொழுது உருவாகும்? என்பதே. அதாவது பொதுக்கட்டமைப்பு உடன்பாடு இன்னமும் கைச்சாத்திடத்தாமதம் ஆவது ஏன்? என்பதே ஆகும்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு விரைவில்– அதாவது சில தினங்களுக்குள்ளேயே கைச்சாத்தாகும் எனச் சில ஊடகங்கள் தெரிவித்து வந்தபோதும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பெரும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால் பொதுக்கட்டமைப்புக் குறித்துக் இறுதித்தீர்மானம் எடுக்க வேண்டியதாக அரசாங்கத்தரப்பே உள்ளது. ஏனெனில் பொதுக்கட்டமைப்புக் குறித்து விடுதலைப்புலிகள் ஏற்கனவே தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திவிட்டனர். ஆகையினால் பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய முன் நகர்வுகளை அடுத்தே அதன் வெற்றி தங்கியுள்ளது.

பொதுக்கட்டமைப்பை எதிர்த்தே தீருவது எனப் பிரகடனம் செய்த ஜே.வி.பி தானாகவே காலக்கெடுவும் விதித்து, பின்னர் தானாகவே ஆட்சியில் இருந்து வெளியேறிவிட்டது. இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைத் தீவிரப்படுத்துவதில் தடை ஏதும் இருப்பதாக இல்லை.

ஆனால் பொதுக்கட்டமைப்பு குறித்து சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் தாமதமடைவதானது ஜே.வி.பி யை ஆட்சியில் இருந்து வெளியேற்ற பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை அவர் தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார், என்ற முடிவிற்கே வர வைத்துவிடும். அவ்வாறு இல்லாவிடில் ஜே.வி.பி வெளியேறியதன் பின்னர் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்பாட்டிற்கு வரக் காலதாமதம் ஏன்?

ஜே.வி.பி வெளியேறியதன் பின்னர் வெளியாகும் தகவலின்படி பொதுக்கட்டமைப்புப் பிரேரணை விரைவில் பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பு சமர்ப்பிக்கப்போவதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையானால் மேலே எழுப்பப்பட்ட கேள்வியும் சரியானதாகவே அமையும். அதாவது ஜே.வி.பி யை வெளியேற்ற பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை சந்திரிகா குமாரதுங்க பயன்படுத்திக் கொண்டார் என்பது நிரூபணமாகிவிடும்.

அத்தோடு பொதுக்கட்டமைப்புப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே கைச்சாத்தாகுதல் என்பது பெரும்பாலும் சாத்தியப்பாடற்ற தொன்றாகவே இருக்கும். ஏனெனில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் திட்டவரைவு திருத்தங்களுக்கு உள்ளாக்கப்படுதல் கூடும். அவ்வாறு இல்லாதுவிடில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படுவதில் அர்த்தம் இல்லாது போய்விடும்.அடுத்ததாக இது பாராளுமன்றத்தில், நிறைவேற்றப்படுமா? என்ற கேள்விக்கும் இடமுண்டு

மேலும் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றினால் சமர்ப்பிக்கப்படும் பிரேரணை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுமா? அதாவது எவ்வாறு சிறுபான்மை அரசாங்கம் இதனை எதிர்க்கும் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டுள்ள எதிர்கட்சியின் எதிர்ப்புக்களையும் மீறி இத்திட்ட வரைவை நிறைவேற்றி அமுல் செய்ய முடியும்.

இது சனாதிபதி சந்திரிகாவிற்கோ அன்றி அவருக்கு நெருக்கமானவர்களுக்கோ தெரியாததொன்றல்ல. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அற்ற அரசாங்கத்தால் ஆட்சி நடத்துவது எத்தனைதூரம் கடுமையானது என்பது அவருக்குத் தெரியும். அவ்வாறு இருந்தும் பொதுக்கட்டமைப்புப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏன் முயலவேண்டும்?

இந்தவகையில் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை ஆட்சியாளர்கள்பாதிக்கப்பட்ட மக்களுக்காக அன்றி தமக்குச் சாதகமாகப்பயன்படுத்திக்கொள்வதில் காட்டும் அக்கறையே அதிகமாகவுள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில் இதுவரையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சனாதிபதியின் நடவடிக்கைகள் முன்னேற்றம் கண்டிருத்தல் வேண்டும். ஆனால் ஜே.வி.பி வெளியேறிய பின்னரும் பேச்சளவிலேயே பொதுக்கட்டமைப்பு விவகாரம் உள்ளமை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது.

# சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழு மீது ஆசிய மனித உரிமைமையம் கடும் விசனம்!

### –மூடி மறைக்கும் செயற்பாடு கொண்டதெனக் குற்றச்சாட்டு

பிந்துனுவெவ படுகொலை பற்றியும், அதன் பிற்பாடு நடத்தப்பட்ட விசாரணைகள் தீர்ப்புக்கள் பற்றியும் ஆசிய மனித உரிமை மையம் சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழு மீது கடும் விசனத்தைத் தெரிவித்துள்ளது.

ஆசிய மனித உரிமை மையம் 2005 ஆம் ஆண்டு ஜுன் இரண்டாம் திகதி ஓர் அறிக்கை வெளியிட்டது.

இவ்வறிக்கையின் மூன்றாம் பகுதியில், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மூடி மறைக்கும் செயற்பாடு,என்ற தலைப்பில் சிறிலங்கா மனித உரிமை ஆணைக் குழுவை ஆசிய மனித உரிமை மையம் கடுமையாகச் சாடியுள்ளது.

பிந்துனுவெவ படுகொலை நடந்தவுடனேயே ஒக்டோபர் 27 ஆம் திகதி சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழுவின் குழுவொன்று சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றது.இக்குழுவில் அதன் தலைவர் வாயிஸ் முஸ்தாபா,கொட்விறே குணத்திலக, மனோரி முத்துதுவகம, சரத்கூரே ஆகியோர் அங்கத்தவர்களாக இருந்தனர்.

இச்சம்பவத்தில் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உயிர்தப்பிய பத்துப் பேரில் ஒன்பது பேரிடம் மனித உரிமை ஆணைக்குழுவினர் விசாரணை நடத்தினார்கள்.

ஒருவர்மட்டும் அவரின் கடும் காயங்கள் காரணத்தால் கதைக்க முடியவில்லை. இப்பத்து உயிர் தப்பியோரில் ஒருவருக்கு 11 வயது, ஒருவருக்கு12 வயது, இன்னும் மூவர் 18 வயதுக்குக் குறைந்தவர்கள்.

படுகொலைச்சம்பவத்தின்போது பாதுகாப்புக்குத் தப்பியோட முயன்ற சிலரில் ஒருவரை சிறிலங்கா பொலிசார் சுட்டுக்கொன்றனர் என்று சிறிலங்கா மனிதஉரிமை ஆணைக் குழுவிற்கு உயிர்தப்பிய ஒன்பது பேரும் கொடுத்த வாக்கு மூலத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

மேலும் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு வாக்குமூலம் கொடுத்த உயிர் தப்பியோரில் ஒருவர் இரண்டு விரல்களைத் துப்பாக்கிச் சூட்டினால் இழந்திருக்கிறார்.

சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழு 2000 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி வெளியிட்ட இடைக்கால அறிக்கையில் கூறியவற்றில் கீழ்வருவதும் ஒன்று.

"பிந்துனுவெவ முகாமில் நிறுத்தப்பட்டிருந்த 60 சிறிலங்காப் பொலிசாரும், அன்று நடந்த தாக்குதல்களை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்காததால் தங்கள் கடமையிலிருந்து தவறிய குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். இதனால் தடுத்து வைத்திருக்கப்பட்டோரில் 28 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

மேலும் தடுத்து வைத்திருக்கப்பட்டோர் பலர் படுகாயமுற்றிருக்கிறார்கள். அத்தோடு அங்கு சுற்றியிருந்த கூட்டத்தினரும் துப்பாக்கிகள் வைத்திருக்கவில்லை. கத்தி, தடி போன்ற பொருட்களையே வைத்திருந்தனர்.

மாறாக சிறிலங்காப் பொலிசாரே முழுமையாக ஆயுதம் தரிந்திருந்தார்கள். ஆகையால் அக் கூட்டத்தை சிறிலங்காப் பொலிசாரால் சுலபமாகக் கலைத்திருக்க முடியும். குறைந்தது கூடியிருந்த கூட்டத்தின் சூத்திரதாரிகளையாவது கைது செய்திருக்கலாம். அத்தோடு உள்ளூர் சிறிலங்காப்பொலிசார் பக்கத்துக் கிராமங்களிலிருந்து குற்றவாளிகளைக் கைது செய்ய எடுத்த நடவடிக்கை குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கு எவ்விதத்திலும் உதவக்கூடியவகையில் அமையவில்லை'' என்று குறிப்பிட்டிருந்தது.

இதன் மூலம் பிந்துனுவெவ படுகொலையில் சிறிலங்கா பொலிசார் நேரடியாகப் பங்குபற்றியிருக்கிறார்கள் என்பதற்குத் தடயங்கள் இருந்தும் சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழு சிறிலங்கா பொலிசாரைப் பெரிதாகக் குற்றம் காணவில்லை. கடமையிலிருந்து தவறிய அவர்கள் மீது குற்றத்தை மட்டுமே அது சுமத்தியிருக்கிறது.இதுவே பின்வந்த விசாரணைகளுக்கும், வழக்குகளுக்கும் ஒரு முன்னோடியாக பொலிசார் குற்றமற்றவர் என்ற கடைசி முடிவிற்கு வரவழி வகுத்தது.

தங்களைத் தாக்குபவர்களிடமிருந்து தப்பியோடிய தமிழ்க் கைதிகளைச் சிறிலங்காப்பொலிசார் சுட்டது மட்டுமல்லாமல் இத்தாக் குதலுக்கு ஒத்துழைத்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருந்தும் சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழு இந்தமுடிவுக்கு வந்தது கவனத்திற்குரியது.

சிறிலங்கா மனிதஉரிமை ஆணைக்குழுவின் அறிக்கை மேலும் சில முக்கியமான விடயங்களை உதாசீனம் செய்திருக்கிறது.

உதாரணமாக இருவர், யாழ்ப்பாணப் பிரதி மேஜர் ரவிராஜ் உட்பட கூறிய ஒரு விடயத்தை அறிக்கையில் குறித்துக்காட்டவில்லை. அதாவது பிந்துனுவெவவில் காயப்பட்டு பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிலர் கட்டிலோடு சங்கிலியால் கட்டப்பட்டு இருந்தார்கள் என்று இவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

மேலும் சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்தம்படிந்த தடிகளும், இரும்புக் கட்டைகளும் விசாரணைக்குச் சமர்ப்பிக்கப்பட்டமை விசித்திரமானது.

சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழு அதன் அறிக்கையை இடைக்கால அறிக்கை என்று குறிப்பிட்டதால் மேலுமொரு அறிக்கையைச் சமர்ப்பிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மனித உரிமை ஆணைக்குழு அப்படி ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை.

சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கை ஒரு கண்துடைப்புமட்டுமே என்று ஆசிய மனித உரிமைகள் மையம் சாடியிருக்கிறது.

# பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தக்கோரி திருமலையில் உண்ணாவிரதப் போராட்டம்

(திருமலை)

ஆழிப்பேரலைப் பொதுக் கட்டமைப்பை உடனடியாகக் கைச்சாத்திட்டு நடை முறைப்படுத்து மாறு கோரி திருகோணமலையில் நேற்று முதலாவது நாள் உண்ணா விரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

திருகோணமலை சிவன் கோவில் வீதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

பொதுக்கட்டமைப்பை ஆதரித்து திருமலை- சல்லி அம்மன் கோயில் முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வு இரண்டாம் நாளாக இன்று நடத்தப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தமிழ் மக்கள் பேரவை இதனை ஒழுங்கு செய்துள்ளது.

மூன்றாம் நாளாக ஒரு நாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வு புதன்கிழமை உப்புவெளி மூன்றாம் கட்டைச் சந்திப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கிறது. (25)

# பொ.ஐ.மு-ஜே.வி.பி மோதல்; நான்குபேர் காயம்; வாகனம் சேதம்!

(கொழும்பு)

கிரிபேவாவ பலநோக்கு கூட்டுறவு சங்க வருடாந்த கூட்ட நிறைவின் போது பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கும், ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கும் இடையே நடந்த மோதலில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவரும் பொலிசார் ஒருவரும் இராணுவச்சிப்பாய் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த கூட்டுறவு சங்க வருடாந்த கூட்டத்தின் போது இரு சாராருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து மோதல் வெடித்துள்ளது. இதில் கடும் காயங்களுக்கு உள்ளான ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் குருநாகல் வைத்தியசாலையிலும், மற்றையவர் கிரிபேவாவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிரிபேவாவ பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் அதிகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வசமேயுள்ளது. இவ்விரு சாராருக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்துவதற்காக வந்த ஐக்கிய தேசியக்கட்சியின் சேருவில அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் சாந்த ரணவீரவின் வாகனமும் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

## பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் பாதாளக்குழு உறுப்பினர் பலி!

(கொழும்பு)

திஸ்மகாராமவில் நேற்று முன்தினமிரவு பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பாதாள உலகக் குழு ஒன்றின் முக்கியஸ்தர் கொல்லப்பட்டுள்ளார். கைக்குண்டுகள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் தங்கல்ல பொலிசார் இவரைக் கைது செய்யச் சென்றவேளையில் குறித்த நபர் பொலிசாரை நோக்கி கைக்குண்டு வீச்சு மேற்கொண்டதன் காரணமாகவே பொலிசார் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெலியத்த ஏக்கேவெலவைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஏற்கனவே ஒன்பதுகொலைகளுடனும், பல குற்றச்செயல்களுடனும் சம்பந்தப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# ஒரு வருட காலத்திற்குள் நான்கு தேர்தல்கள்; முடிவை மாற்றுமாறு ஜே.வி.பியிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி விலகியதால் அடுத்த ஓராண்டு காலத்திற்குள் நான்கு தேர்தல்களுக்கு மக்கள் முகம் கொடுக்கவேண்டியுள்ளதால் ஜே.வி.பி தனது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் குழுவொன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இரு சாராரையும் மீண்டும் ஒன்றிணைப்பது சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகளின்போது இது பற்றி ஜே.வி.பி தலைவர்களுக்கு தெளிவான விளக்கங்களை அளித்திருப்பதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி வெளியேறியதையடுத்து அரசாங்கத்தின் நிலைத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாகாணசபைகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கட்டாயமாக நடத்தப்பட வேண்டியுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தல் மட்டுமல்லாது இவ்வாறான நிலையில் பொதுத்தேர்தல் மற்றும் மாகாணசபைத தேர்தல்களும் நடத்தப்பட்டால் அதற்கென பெருமளவு நிதியை செலவிட வேண்டி ஏற்படும் என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

ஒரு வருடகாலத்தினுள் இந்த நான்கு தேர்தல்களுக்கும் நாடு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதுடன் வேட்பாளர்களும் அரசாங்கமும் பெரும செலவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதையும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# பாராளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று திடீரென ஒத்திவைப்பு

நேற்று சனாதிபதி தலைமையில் நடைபெறவிருந்த பாராளுமன்றக் குழுக்கூட்டம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.இதேவேளை பிரதமர் தலைமையிலான சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஜே.வி.பி யுடன் இணைந்து அரசாங்கத்தை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.இதன் காரணமாகவே நேற்றைய பாராளுமன்றக்குழுக் கூட்டம் நடைபெறவில்லை என சுட்டிக் காட்டப்படுகின்றது. ஆட்சியினைக் கைப்பற்றும் அளவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பிரதமர் தரப்பு இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை எனினும் தொடர்ந்தும் அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும், உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## திருமலை கடற்படைத்தளபதி இடமாற்றம்

திருமலை சிறிலங்காக் கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கொழும்பிற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் இவரது இடமாற்றம் அமுலுக்கு வருகிறது. திருமலையின் புதிய கடற்படைத்தளபதியாக ரியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கடற்படைத் தலைமையகத்தின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியான ரியர் அட்மிரல் இரட்ணகீர்த்தி திருமலைக்கு இடமாற்றப்படுவதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கே சரத் வீரசேகர நியமிக்கப்படுகிறார்.

# சுனாமிப்பொதுக்கட்டமைப்பு பிரேரணை நாளை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை நிறுவுதல் தொடர்பான பிரேரணை நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும்

இது தொடர்பாக இரு நாட்கள் விவாதங்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக எத்தனை நாட்களுக்கு விவாதங்களை நடத்துவது, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன என்பன பற்றி நாளை பாராளுமன்றத்தில் நடைபெறும் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படுமென ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் கூறினார்.

பொதுக்கட்டமைப்பானது ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசு போரை நடத்தத் தீர்மானித்தால் அதை சந்திக்கத் தயாராகவுள்ளோம்

## திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(திருகோணமலை)

நாம் இன்னமும் தீர்வுக்கான நம்பிக்கையோடு இருக்கிறோம் அதே நேரத்தில் அரசு போரை நடத்தத் தீர்மானித்தால் மிகவும் மகிழ்ச்சியாக அதைச் சந்திக்கிறோம். யுத்தம் தான்எம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் இவ்வாறு திரு கோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மகா சங்கங்களின் நான்கு நாயக்கர்களும் விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை நடத்த வேண்டும் என்கிறார்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகளோ விடுதலைப்புலிகளுக்கு எதுவும் அளித்துவிடக் கூடாது பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடக் கூடாது என்கிறார்கள் பௌத்தபிக்குகளும் இதில் இணைந்து கொண்டுள்ளனர். ஆக நாம் இறுதி முடிவாக எவரிடமிருந்தும் எதையும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது.

பண்டா-செல்வா ஒப்பந்த காலத்திலும் பௌத்த பிக்குகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதே பௌத்த பிக்குகளே பண்டாரநாயக்கவைக் கொன்றனர். தமிழ்மக்களுக்கான எந்த ஒரு ஒப்பந்தமும் உருவாக்கப்படுகிறபோதெல்லாம் பௌத்த பிக்குகள் எதிர்ப்புத் தெரிவித்தே வந்துள்ளனர்.

எந்த ஒரு தென்னிலங்கை அரசியல்வாதியும் பௌத்த பிக்குகளை எதிர்க்கமாட்டார்கள். பௌத்த பிக்குகளின் உண்ணாவிரதப் போராட்டம் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை இலங்கையில் தமிழ்மக்களுக்கான தீர்வை ஏதும் அளித்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

நாம் இன்னமும் தீர்வுக்காண நம்பிக்கையோடு இருக்கிறோம். அதே நேரத்தில் அரசு போரை நடத்தத் தீர்மானித்தால் மிகவும் மகிழ்ச்சியாக அதை சந்திக்கிறோம் யுத்தம் தான் எம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்றார்.

## -ரெஜினோல்ட் கூரேயின் இராஜினாமாவை அடுத்து-

# மேல்மாகாணசபை அதிகாரத்தை ஐக்கிய தேசியக்கட்சி கோரவுள்ளது

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் அமர்வு நேற்றுக்காலை இடம்பெற்றபோது சபைத் தலைவர் முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேயின் பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இந்தச் சூழலில் ஐக்கிய தேசியக் கட்சி தாமே தனித்து பெரும்பான்மைக் கட்சி எனவும் மாகாண சபை அதிகாரத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபைக் குழுத் தலைவர் வர்ணதீப்த்தி ராஜபக்ஷ விசேட உரை ஒன்றினை ஆற்றினார். மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றதனை அடுத்து மாகாண சபையிலும் அரசிற்கு வழங்கிய ஆதரவினை விலக்கிக் கொண்டு தாம் எதிர்க்கட்சியில அமர்வதாகத் தெரிவித்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டனர்.

இதேவேளை சபையில் பிரசன்னமாகியிருந்த பதவி விலகிய ரெஜினோல்ட் கூரேயும் தனது பதவிவிலகலுக்கான விளக்கத்தை அளித்தார். இந்த நிலையில் மாகாண சபைச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக முதலமைச்சர் பதவி விலகியபின் அமைச்சரவையும் பதவி விலகியதாகவே கருதப்படும். இதேவேளை மாகாண சபையின் விவசாய அமைச்சருக்கு எதிராக திட்டமிடப்பட்டு இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரனையும் செயலற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகத்தான்குளம் காட்டிலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா முகத்தான் குளம் காட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக செட்டிகுளம் பொலிசார் தெரிவிக்கின்றனர். புத்தளத்தைச் சேர்ந்த ஜக்கின் என்ற நபரே இனம் தெரியாதவர்களினால் கொலை செய்யப்பட்டுள்ளார் சனிக்கிழமை பாரவூர்தி ஒன்றில் மன்னாருக்கு சென்றவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டு இருக்கின்றார். அவர் சென்ற பாரவூர்தியினை பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரன் என்பவர் செலுத்தி வந்தபோது அவரை பொலிசார் சந்தேகத்தின் பெரில் கைது செய்துள்ளனர் (21)

# மருதானையில் வெடிபொருட்கள் மீட்பு

மருதானையில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மருதானை பேருந்து நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொதி ஒன்று இருப்பதாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அங்கு சென்ற பொலிசாரால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.இரண்டு கைக்குண்டுகள் ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவைகள் 41 மற்றும் இராணுவ உருமறைப்பு சீருடைகள் இரண்டு என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# முகமாலையில் நடத்துநர் கைது

(தென்மராட்சி)

முகமாலை சோதனைச்சாவடிக்குள் வந்த பேருந்தும் ஒன்றில் நேற்று துப்பாக்கி ரவை ஒன்று இருந்ததாகக் கூறி பேருந்தின் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருந்து நடத்துநர் பொலிசாரால் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். நடத்துநர் பதினையாயிரம்ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தமிழினம்...

இடம்பெற்ற சிங்களப் பேரினவாதிகளுக்கெதிரான கண்டனப்பேரணியின் முடிவில் தமிழீழத் தேசியத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இற்றைக்கு இருபத்துமூன்று வருடங்களாக எமது உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தினை சிறிலங்கா அரசு சமாதானத்தையும், ஒழுங்கையும் நாட்டில் நிலைநாட்டுவதற்காக போரினை நடாத்துவதாக உலக அரங்கிற்கு தெரியப்படுத்தி தமிழினத்தை தனது இராணுவ அடக்குமுறையால் அழித்தது. தமிழினத்தின் பெறுமதிமிக்க பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், பல கோடி சொத்துக்களையும் நாம் இழக்க நேரிட்டது. நிலத்தையும் இருந்த இல்லிடங்களையும் இழந்த துயர் இன்னமும் எமக்கு ஆறவில்லை. ஆனால் போரியல் வரலாற்றில் தமிழர்களை தலைநிமிர வைத்துள்ள தமிழீழதேசியதலைமை ஒரு மரபுவழித் தமிழர்படை உண்டு என்பதை சர்வதேச தலைமைகளுக்கும் சிங்கள பேரினவாத சிந்தனையுடைய தலைமைகளுக்கும் உணரவைத்துள் ளது. இவ்வுயர் இராணுவப்பலத்தின் காரணத்தினால்தான் சமாதான ஒப்பந்தம் உருவாகியது. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று வருடங்களாகியும் தாயகத்தில் தமிழர்களின் இயல்புவாழ்க்கை இன்னமும் திரும்ப வில்லை. இந்நிலையில் ஏறக்குறைய 70 வீதமான பாதிப்பை சுனாமிப்பேரலையால் அடைந்துள்ள நாம் அப்பாதிப்பை ஈடுசெய்யும் வகையில் உலக நாடுகளால் வழங்கப்படும் உதவிகளை பகிர்ந்தளிக்கும் பொதுக்கட்ட மைப்பைக் கோரியபோது அதற்கு எதிராக சிங்கள மக்களை அணிதிரட்டி உண்ணாவிரதப்போராட்டம் ஆர்ப்பாட்டப்பேரணிகளை நடாத்தும் பேரினவாத தலைமைத்துவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ்இனம், சிங்கள இனவாதம் பேசும் தலைமைகளால் காலம் காலமாக உயிர்,உடைமை, அழிவுகளையும், ஒடுக்குமுறைகளையும் இராணுவ அநீதிகளையும் சுமந்து வந்துள்ளது. இப்பாரங்களை இனியும் நாம் தொடர்ந்து சுமக்க முடியாது. பேரினவாத தலைவர்கள், அப்பாவிச் சிங்களமக்களை தவறான முறையில் வழிநடத்தி இனவாதக் கருத்துக்களை ஊட்டி இம் முரண்பாட்டை வலுவாக்கி மீண்டும் தமது அரசியலைப் பலப்படுத்தி தலைமைப்பதவிகளை தக்கவைக்க முயலும் நாடகத்தால், தமிழினத்தின் உரிமை, விடுதலை, சுதந்திர வேட்கையை நசுக்கிவிட முடியாது. எமது ஆயுதபலமும், அரசியல்பலமும் தேசிய ஒற்றுமையும் வலுவடைந்துள்ளமையையே சர்வதேச சமூகம் மதித்துள்ளது.

இலங்கை அரசின் சிறந்த தலைமை ஒன்றை சிங்கள தலைமைத்துவத்திலிருந்து காணமுடியாத அவலம் தென்னிலங்கை அரசியல் நிலைமையிலிருந்து உணர முடிகிறது. இதனால் எமது உரிமைகளை, விடுதலையை சுதந்திரத்தை தமிழினம் தான் பெற்றுக்கொள்வதற்கு சிங்களஅரசின் தீர்வுகளை எதிர்பார்த்திருப்பது தற்போதைய நிலையில் பொருத்தமற்றது. எனவே எமது தாயக நிலப்பரப்பை விடுவித்து சுதந்திர தமிழர்தாயகத்தை அமைப்பதற்கான சூழல்உருவாகி வருவதற்கு சிங்களப் பேரினவாத தலைமைகளே அண்மைக்காலமாக வழிகாட்டி நிற்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா)

## அக்கரைப்பற்றில்...

பார்ப்பதற்காக சனிக்கிழமை அக்கரைப்பற்று வந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது. இவர் தனது தாயாரின் வீட்டிலிருந்து முகாமிற்குச் செல்லும் வழியில் வைத்தே கடத்தப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று நீதிபதி எம்.எஸ்.முகைதீன் சம்பவ இடத்தைப் பார்வையிட்டார். அக்கரைப்பற்று சிறிலங்காப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (32)

## சிங்கள...

யோரத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்குச் "திரும்ப உங்கள் ஊருக்கு செல்லுங்கள்" என்ற துண்டுப்பிரசுரத்தை சிங்களமொழியில் கையளித்ததுடன் உங்கள் உடமைகளைக் கொண்டு செல்ல சாக்குப்பைகள் தருகின்றோம் என்று கூறி சாக்குப்பைகளையும் இராணுவ காவலரண்களுக்குள் வழங்கிச்சென்றன்.

இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் சிவனேசன் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (கா,41,27,33)

## முன்னாள்...

இயங்கியவண்ணமே இருந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட பொலிஸ் அதிகாரி ஏ.எஸ்.ஆனந்த திப்பெட்டுவவ விசாரணைகளை நடத்தியதுடன் சடலத்தினை வவுனியா பொதுமருத்துவமனைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் இது தொடர்பாகச் சம்பவத்தினை நேரடியாகப் பார்த்தாகத் தெரிவிக்கப்படும் சிறுமியையும்,சம்பவம் இடம்பெற்ற இடத்தில் உள்ள வீடுகளிலும் விசாரணையினை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை நேற்று முன்தினம் இரவு கோயில்குளம் பகுதியில் புளொட் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (21)